# உதயன்

சுடர் : 37
கதிர் : 329

வெள்ளிக்கிழமை
21 ஒக்ரோபர் 2022

ஐப்பசி 04 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 12
விலை : ரூ. 50


## யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தொழிற்சந்தை

யாழ்ப்பாணம், ஒக். 21
யாழ்ப்பாணம் மாவட்டத் தொழிற்சந்தை யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நாளை நடைபெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
இந்தத் தொழிற்சந்தையில் சுமார் 40க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் கலந்துகொள்ளவுள்ளன. ஆர்வமுள்ளவர்கள் இந்தத் தொழிற்சந்தையில் கலந்துகொள்ள முடியுமென்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

### நிபந்தனைகளுக்கு உட்பட்டு

# ‘22’ ஆதரிப்பதற்கு ஐ.ம.ச. தீர்மானம்

### சஜித் வெளிப்படை அறிவிப்பு



கொழும்பு, ஒக்ரோபர் 21
அரசமைப்பின் 22ஆவது திருத்தச் சட்டவரைவுக்கு சில நிபந்தனைகளின் அடிப்படையில் ஆதரவு வழங்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.

11

## உள்ளாட்சித் தேர்தலை ஒத்திவைக்கக்கூடாது!

### எதிர்க்கட்சிகள் கூட்டறிக்கை!



யாழ்ப்பாணம், ஒக். 21
தேர்தல் முறைமையில் திருத்தம் என்ற போர்வையில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைத்து தேர்தல் வரைபடத்தை சுருங்கச் செய்யும் அரசின்

11

## இரட்டைக் குடியுரிமைக்கு எதிராகவே எமது வாக்கு!

### பெரமுனவின் எம்.பி. பிரேம்நாத் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 21
இரட்டைக் குடியுரிமைக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கும் 22ஆவது திருத்தத்தை பெரமுன ஆதரிக்கும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் பிரேம்நாத் சி தொலவத்த தெரிவித்தார்.

09

## வடிசாராயத்துடன் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், ஒக். 21
யாழ்ப்பாணம் - கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செல்வபுரம் பகுதியில், வடிசாராயத்துடன் சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து 15 லீற்றர் வடிசாராயம் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

09

## செனட் முறை இருந்திருப்பின் இந்தியா மௌனித்திருக்கும்!

கொழும்பு, ஒக். 21
இலங்கையில் 'செனட்' சபை முறைமையை இல்லாதொழிக்காமல் இருந்திருந்தால், 13 ஆவது திருத்தச்சட்டத்தை அரசமைப்புக்குள்

11

## ‘22’ நிறைவேறும்; பெரமுன உறுதி!

கொழும்பு, ஒக். 21
அரசமைப்பின் 22ஆவது திருத்தம் நிறைவேற்றப்படும். அதற்கு நாம் ஆதரவு வழங்குவோம் என்று ஆளுங்கட்சியின் பிரதான பங்காளியான பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர்.
அரசமைப்பின் 22ஆவது திருத்தம் மீது நாடாளுமன்றத்தில் நேற்று விவாதம் இடம்பெற்றது. இதில் கலந்து

09

## ஹெரோய்ன் விற்றவர் மண்கும்பானில் கைது!

### தீவகத்துக்கு ஹெரோய்ன் கடத்தும் சூத்திரதாரி என்கின்றனர் பொலிஸார்

யாழ்ப்பாணம், ஒக். 21
ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உயிர்கொல்லி போதைப்பொருளான ஹெரோய்ன் விற்பனையில் ஈடுபட்ட சந்தேகநபரொருவர்

09

## பல்வேறு வழக்குகளில் தேடப்பட்ட நபர் கைது

யாழ்ப்பாணம், ஒக். 21
யாழ்ப்பாணத்தில் பல்வேறு குற்றச்செயல்களைப் புரிந்து அனைத்துப் பொலிஸ் நிலையங்களாலும் தேடப்பட்ட நபர் நெல்லியடிப் பகுதியில் வைத்து நேற்றுக் கைது செய்யப்பட்டார். கிளிநொச்சியைச்

11

## வெறும் 45 நாள்களில் பதவி விலகினார் பிரிட்டன் பிரதமர்



லண்டன், ஒக். 21
பட்ஜெட்டில் செல்வந்தர்களுக்கு வரிக்குறைப்புச் செய்த விவகாரத்தில் கடுமையாக விமர்சிக்கப்பட்டு வந்த பிரிட்டன் பிரதமர் லிஸ் ட்ரஸ் தனது பதவியிலிருந்து விலகியுள்ளார். வெறும் 45 நாள்கள் மட்டுமே பிரிட்டன் பிரதமர் பதவியில் இருந்துள்ளார் லிஸ் ட்ரஸ்.

09

## தமிழ்ப் பாடசாலைகளுக்கு செவ்வாயன்று விடுமுறை!

யாழ்ப்பாணம், ஒக். 21
நாடளாவிய ரீதியாகவுள்ள தமிழ்ப் பாடசாலைகளுக்கு எதிர்வரும் 25ஆம் திகதி செவ்வாய்க்கிழமை விசேட விடுமுறை வழங்கப்படுகின்றது எனக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

11

## ஹெரோய்ன் வழக்கில் நீதிமன்றத்தால் தேடப்பட்ட நபர் ஹெரோய்னுடன் மீண்டும் கைது

யாழ்ப்பாணம், ஒக். 21
மல்லாகம் நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டில், பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நபர் 80 மில்லிகிராம் ஹெரோய்னுடன் நேற்றுக் கைதுசெய்யப்

09

### போலியான உறுதியில் காணி மோசடி

## சகலரையும் முற்படுத்துமாறு நீதிமன்றம் நேற்று உத்தரவு

யாழ்ப்பாணம், ஒக். 21
யாழ்ப்பாணம் நகரில் போலியான உறுதி நிறைவேற்றப்பட்டு மேற்கொள்ளப்பட்ட காணிமோசடிதொடர்பான வழக்கில், சம்பந்தப்பட்ட அனைவரையும்மன்றில்முற்படுத்த யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
காணி மோசடி வழக்கில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய சிறப்புக் குற்ற விசாரணைப் பிரிவினர் முன்னெடுத்த விசாரணை

11

## கோதுமை மா இனி ரூபா 265

கொழும்பு, ஒக். 21
கோதுமை மாவின் விலை மேலும் 25 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதாக அத்தியாவசிய உணவுப் பொருள்கள் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

09


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# போதைப் பொருள் வியாபாரத்தில் அரசு கள்ள மௌனம் காப்பது ஏன்?

## சாள்ஸ் எம்.பி. நாடாளுமன்றில் கேள்வி

கொழும்பு, ஒக்.21

**படைத்தரப்பின் ஆதரவு இன்றிப் போதைப் பொருள் வியாபாரம் இடம்பெற முடியாது. பாடசாலை மாணவர்களிடையே போதைப் பொருள் விநியோகம் இடம்பெறுவது தொடர்பில் அரசாங்கம் கண்டுகொள்ளாது இருப்பது ஏன்? -இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன் தினம் புதன்கிழமை நடைபெற்ற நீதி அமைச்சின் 5 திருத்தச் சட்டங்கள் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

போதைப் பொருள் பாவனை இலங்கையில் மிகவும் சாதாரண விடயமாகிவிட்டது. அதைத் தடுப்பதற்கு எவ்வாறு நடவடிக்கை எடுப்பது என்பது தொடர்பில் ஆராயவேண்டும். போதைப் பொருள் பாவனையால் நாங்கள் பின்தள்ளப்படும் நிலைக்கு செல்லலாம். இளைஞர், யுவதிகளிடம் மாத்திரமன்றி பாடசாலை மாணவர்களிடையேயும் பரவியுள்ளதாக. வெளியாகும் செய்திகளில் இது தொடர்பான விடயங்களை அவதானிக்கலாம். மாணவர்களிடையே கலாசாரச் சீரழிவுகள் ஏற்படுகின்றன. இதற்குப் பிரதான காரணமாக போதைப் பொருள் பாவனை உள்ளது. நாங்கள் ஓரிடத்துக்குச் செல்லும்போது, அதற்கு முன்னரே அங்கு செல்லும் புலனாய்வுத் துறையினர், அங்கு நாங்கள் ஏன் வருகின்றோம் என்ற தகவல்களைப் பெற்றுக்கொள்கின்றனர். அது அவர்களின் கடமையாக இருக்கலாம். இவ்வாறு புலனாய்வுத்துறை இயங்கும்போது, ஏன் போதைப் பொருள் வியாபாரத்தை இலங்கை அரசாங்கத்தால் கட்டுப்படுத்த முடியவில்லை.

போதை பொருள் விடயத்தில் ஆட்சியாளர்கள் சம்பந்தப்பட்டுள்ளனரா? அல்லது படை அதிகாரிகள் சம்பந்தப்பட்டுள்ளனரா? என்ற கேள்விகள் எழுகின்றன. தற்போது மன்னாரில் அதிகளவில் போதை பொருள் பிடிபடுகின்றது. கடற்படை, இராணுவம் மற்றும் பொலிஸ் இவர்களில் எவரேனும் ஒரு தரப்பின் அனுசரணை இன்றி போதை பொருள் வியாபாரம் நடக்க முடியாது. அல்லது அரசியல்வாதிகளின் செல்வாக்கும் உள்ளது. இந்த விடயம் தொடர்பில் அரசாங்கம் ஏன் கணக்கில் எடுக்காது இருக்கின்றது என்ற கேள்வி எழுகின்றது. பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர், யுவதிகள் மத்தியில் போதைப் பொருள் பாவனையைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும். எதிர்காலத்தில் எமது பிள்ளைகள் எவ்வாறு இருக்க வேண்டுமென்று சட்டங்களை உருவாக்கினாலும் போதைப் பொருளால் அனைத்து முயற்சிகளும் தலைகீழாக மாறலாம். இலங்கையின் புலனாய்வுத்துறை ஊடாக இதைத் தடுக்க முடியும். ஆனால், ஏன் அதைச் செய்ய முடியவில்லை என்பது கேள்வியாக வுள்ளது - என்றார். (ஏ-22)

# வாழ்நாள் முழுவதும் வாகனம் ஓட்டத் தடை

## நீர்கொழும்பு நீதிமன்றம் அதிரடித் தீர்ப்பு

கொழும்பு, ஒக். 21

மதுபோதையில் வாகனத்தைச் செலுத்திய 36 வயதுப் பெண்ணுக்கு உயிரிழப்பை விளைவித்த 19 வயதான இளைஞரின் சாரதி அனுமதிப் பத்திரத்தை வாழ்நாள் முழுவதும் தடைசெய்து நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டுள்ளது. நீர்கொழும்பு, தலாதுவ வீதியில் கடந்த ஆண்டு இடம்பெற்ற கோர விபத்து தொடர்பில் சந்தேகநபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்தே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் மதுபோதையில் வாகனத்தைச் செலுத்தியமை உள்ளிட்ட 6 குற்றச்சாட்டுகளுக்கு ஒரு லட்சத்து 99 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன் விபத்தில் உயிரிழந்த பெண்ணின் பெற்றோர் மற்றும் கணவருக்கு 2 லட்சம் ரூபா இழப்பீடும் வழங்குமாறு கட்டளையிடப்பட்டுள்ளது. (ச-இ)



# நகை திருட்டு ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஒக். 21

கொடிகாமம் - சியாமளா மில் வீதியில் கடந்த செவ்வாய்க்கிழமை தனிமையில் இருந்த மூதாட்டியின் ஒன்றரைப் பவுண் சங்கிலியைத் திருடிச் சென்ற நபர் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கைது செய்யப்பட்டார் என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் பொலிஸ் பிராந்திய விசேட புலனாய்வு பொலிஸாரின் விசாரணையில் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார். அத்துடன் சந்தேகநபரிடமிருந்து திருடப்பட்ட நகையும் மீட்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர் யாழ்ப்பாணம் குருநகர் பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய நபர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சந்தேகநபர் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ஒ-14-27)

## வீதிகளில் குப்பைபோடுவோரை

# ஆதாரத்துடன் அறியத் தருவோருக்கு தண்டத்திலிருந்து சன்மானம்

## யாழ்.மாநகரசபை அதிரடி

யாழ்ப்பாணம், ஒக். 21

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட வீதிகள் மற்றும் பொதுஇடங்களில் குப்பைகளை வீசுவோரை ஒளிப்பட ஆதாரத்துடன் அறியத் தருவோருக்கு குற்றத்துக்காக அறவிடப்படும் தண்டப்பணத்தில் 10 வீதத்தை சன்மானமாக வழங்க யாழ்.மாநகரசபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாநகர சபைக் கூட்டம் நேற்றுமுன் தினம் சபை மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போது மாநகரசபை எல்லைக்குட்பட்ட குடியிருப்புக்களுக்கு முன்பாகவுள்ள வீதியோரத்தை குடியிருப்பாளர்களே தூய்மையாகப் பேணவேண்டும்.

வீதியோரங்களைக் குடிருப்பாளர்கள் பற்றையாக வைத்திருப்பதால் பலர் குப்பைகளை வீசிவிட்டுச் செல்கின்றனர். இதற்கு அந்தந்த வீதிகளிலுள்ள மக்களே பொறுப்புக்கூற வேண்டும். அவ்வாறு தூய்மையாகப் பேணாவிடின் அவர்களிடமிருந்து 3 ஆயிரம் ரூபா தண்டப்பணமாக அறவிடப்படும்.

ஆயினும், வீதிகளில் குப்பைகளை வீசிவிட்டுச் செல்வோரை ஒளிப்பதிவு மற்றும் ஒளிப்பட ஆதாரத்துடன் மாநகரசபைக்கு சமர்ப்பிப்பவர்களுக்கு குற்றத்துக்காக அறவிடப்படும் தண்டப்பணத்தில் 10 வீதத்தை சன்மானமாக வழங்கப்படுதல் உள்ளிட்ட விடயங்கள் அடங்கிய தீர்மானத்தை மாநகர முதல்வர் வி. மணிவண்ணன் முன்வைத்தார்.

குறித்த தீர்மானத்துக்கு சபையின் உறுப்பினர்கள் ஆதரவளித்த நிலையில் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (ச-20)

# மூளாயிலுள்ள வீட்டில் உபகரணங்கள் திருட்டு

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மூளாய் பகுதியில் உள்ள வீடொன்றில் இலத்திரனியல் உபகரணங்கள் திருடப்பட்டுள்ளன என்று வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

வீடொன்றில் இரண்டு வயோதிபப் பெண்கள் வசித்து வந்த நிலையில் அவர்கள் இருவரும் கடந்த சில நாள்களுக்கு முன்னர் மட்டக்களப்பில் உள்ள உறவினர் வீட்டுக்குச் சென்றிருந்தனர். வீட்டுக்குத் திரும்பி வந்து பார்த்தவேளை, வீட்டிலிருந்த 2 தொலைக்காட்சிப் பெட்டிகள் உள்ளிட்ட மேலும் பல இலத்திரனியல் உபகரணங்கள் திருடப்பட்டது தெரியவந்துள்ளது.

அதனையடுத்து வீட்டிலுள்ளவர்களால் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (ஒ-14-27)

## கிளிநொச்சியில்

# உணவுப் பற்றாக்குறையால் 9,971 குடும்பங்கள் பாதிப்பு

## மாவட்டச் செயலர் தரவு

கிளிநொச்சி, ஒக். 21

கிளிநொச்சி மாவட்டத்தில் 9ஆயிரத்து 971 குடும்பங்கள் உணவுப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் கர்ப்பிணிகள் 784 பேரும் 576 சிறுவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர் என கிளிநொச்சி மாவட்டச் செயலர் றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிராமிய பொருளாதார புத்தெழுச்சி மையங்களை வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான மாவட்ட மட்டக் கலந்துரையாடல் மாவட்டச் செயலகத்தில் ... நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பிரதேச செயலக ரீதியாக பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள 4 பிரதேச செயலர் பிரிவுகளிலும் 9 ஆயிரத்து 971 குடும்பங்கள் உணவுப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவற்றில் 576 வரையான ஐந்து வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள் ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர். ... வறுமை காரணமாக 784 கர்ப்பிணிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பில் மாவட்ட மட்டக் குழுவுக்கும் சம்மந்தப்பட்ட கிராமிய குழுவுக்கும் பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. மக்களை பாதுகாக்க அனைவருக்கும் உணவு வழங்கவேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் அனைத்துத் துறையினரும் இணைந்து செயற்படவேண்டும்.

வீட்டுத் தோட்டங்களை உருவாக்குதல், உணவு உற்பத்திகளை ஊக்கப்படுத்துதல், உணவு உற்பத்தியாளர்களிடமிருந்து உணவைப் பெற்று பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு வழங்குதல் போன்ற செயற்பாடுகளை விரைந்து செயற்படுத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன - என்றார். (ச-214)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டுத் தலையீட்டுக்கு ஒருபோதும் அனுமதி இல்லை!

## அமைச்சர் அலி சப்ரி தெரிவிப்பு



கொழும்பு, ஒக்.21

இலங்கையின் உள்ளக விடயங்களில் வெளிநாட்டுத் தலையீடுகளை அனுமதிக்கமாட்டோம். உண்மைகளை கண்டறியும் விடயத்தில் அனைத்துக் கட்சித் தலைவர்களையும் உள்ளடக்கிய உள்ளக பொறிமுறையொன்றை தயாரிக்கவேண்டும் என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை அமைச்சின் விசேட கூற்றை முன்வைத்தே அமைச்சர் - இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ள தாவது:-

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது கூட்டத் தொடரின்போது இலங்கையின் பொறுப்புக் கூறல் மற்றும் நல்லிணக்கம் தொடர்பில் பிரேரணையொன்று நிறைவேற்றப்பட்டது. ஐக்கிய இராச்சியம், அமெரிக்கா, கனடா உள்ளிட்ட 24 நாடுகள் இதற்கு ஆதரவாகவும் 7 நாடுகள் எதிராகவும் வாக்களித்ததுடன் 20 நாடுகள் வாக்களிப்பை தவிர்த்திருந்தன.

இந்தத் தீர்மானங்களை இலங்கை கடுமையாக எதிர்க்கின்றது என்று அறிவித்திருந்தோம். இலங்கையில் நாங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் கூறியிருந்தோம். முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பில் எங்களின் கவனத்தைச் செலுத்தி வருகின்றோம். இந்த விடயத்தில் அரசியல் ரீதியாகவும் கவனம் செலுத்தி வருகின்றோம். தேசிய பேரவையில் இதற்கான தீர்வைக் காண்பதற்கு நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

இதேவேளை, வெளிநாடுகளின் தலையீடு இன்றி நாங்கள் எங்களின் முயற்சிகளை மேற்கொள்கின்றோம். அதேபோன்று பொறுப்புக் கூறும் விடயங்கள் தொடர்பிலும் நாங்கள் கவனம் செலுத்தியுள்ளோம். இவ்வாறான நிலைமையில் இணை அனுசரணை நாடுகள் முன்னெடுக்கும் நடவடிக்கைகள் தொடர்பில் நாங்கள் எங்களின் கவனத்தை செலுத்தியுள்ளோம்.

48ஆவது தீர்மானம் பல்வேறு அரசியல் பின்னணிகளை உள்ளடக்கி தயாரிக்கப்பட்டுள்ளது. இதனால் இந்தத் தீர்மானத்தை நாங்கள் எதிர்க்கின்றோம். அதை ஏற்றுக் கொள்ளவில்லை. வெளிநாட்டுத்தலையீடுகளை நாங்கள் நிராகரிக்கின்றோம். இது உள்ளக பிரச்சினை. இதை நாட்டுக்கு உள்ளேயே தீர்த்துக்கொள்ள வேண்டும். பொறிமுறையொன்றின் ஊடாக தீர்வு காண்பதற்கான முயற்சிகளை நாங்கள் முன்னெடுக்கின்றோம். இதற்கு மேலதிகமாக கொழும்பில் உள்ள இராஜதந்திரிகளை சந்தித்து இது தொடர்பில் அவர்களுக்கு விளக்கியுள்ளோம். அவர்கள் எங்களுக்கு ஆதரவளிப்போம் என்று உறுதியளித்துள்ளனர். நாங்கள் எங்களின் நிலைப்பாட்டை ஜெனிவாவில் விளக்கியுள்ளோம்.

இங்கு உள்ளக பொறிமுறையே காணப்பட வேண்டும். வெளியக பொறிமுறை இங்கு நிறுவப்படக் கூடாது என்று கூறியுள்ளோம். இந்தப் பொறிமுறையை நிறுவுவதற்கு 6 மில்லியன் அமெரிக்க டொலர் செலவாகும். இதுவொரு கடினமான நடவடிக்கையாகவே உள்ளது. உலகளாவிய ரீதியில் நிலவும் பொருளாதாரப் பிரச்சினைகளால் இந்த செலவீனம் அதிகரித்துள்ளது.

சர்வதேச உறுப்பு நாடுகள் மிகவும் சாதகமாக மற்றும் இலங்கைக்கு சார்பான நாடுகள் இலங்கையில் உள்ளக ரீதியிலான பொறிமுறை காணப்படவேண்டும் என்று ஆதரவைத் தெரிவித்துள்ளனர். இந்த நடவடிக்கைகள் அரசமைப்புக்கு அமையவே முன்னெடுக்கப்பட வேண்டும். நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் - என்றார். (எ-22)



## நினைவுதினம் கடைப்பிடிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 21

கடந்த 2016 ஆம் ஆண்டு பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களாகிய நடராசா கஜன், பவுண்ராஜ் சுலக்சன் ஆகியோரின் நினைவுதினம் யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் நேற்று வியாழக்கிழமை உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது யாழ்.பல்கலையின் பிரதான தூபியில் மாணவர்களது உருவப்படம் வைக்கப்பட்டு மாணவர்களால் ஈகைச்சுடரேற்றப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. (ஒ-14,125)

## அர்ஜீன் சம்பத்துக்கு அழைப்பு



கொழும்பு, ஒக்.21

இந்தியாவின் ஆளும் பா.ஜ.க. அரசின் பங்காளிக் கட்சியான இந்து மக்கள் கட்சியின் தலைவர் அர்ஜீன் சம்பத் இலங்கை வர வேண்டும் என்று இலங்கை சிவசேனை அமைப்பு நேரில் அழைப்பு விடுத்துள்ளது. மறவன்புலவு க.சச்சிதானந்தன் மற்றும் சிவத்தொண்டர் வெங்கடேஸ்வரன் ஆகியோரே நேரில் சென்று இந்த அழைப்பை விடுத்துள்ளனர். (எ-20)

## நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்

யாழ்ப்பாணம், ஒக். 21

வட்டு. இந்துக்கல்லூரியின் நிறுவுநர் நினைவு நாளும் பரிசளிப்பு விழாவும் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு கல்லூரி திறந்தவெளி முத்து அரங்கில் இடம்பெறவுள்ளது.

கல்லூரி முதல்வர் அ.ஆனந்தராசா தலைமையில்இடம்பெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்லூரி பழைய மாணவியும் இலங்கை மின்சாரசபையின் சுன்னாகம் உதுறு மின்நிலைய செயற்பாட்டு பொறியியலாளருமான ஜென்சி திலீபன் கலந்துகொள்ளவுள்ளார். (ஒ-14)

# போதைப்பாவனையால் வழிதவறும் இளையோருக்கு வழிகாட்டுவோம்

## பேசாலை கத்தோலிக்க இளைஞர் ஒன்றியம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஒக். 21

அதிகரித்துவரும் உயிர்கொல்லி போதைப்பொருள் பாவனையால் திசைமாறி வழிதவறிச் செல்லும் இளையோருக்கு வழிகாட்ட அனைவரும் முன்வரவேண்டும் என பேசாலை கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

பேசாலை கத்தோலிக்க ஒன்றிய இளைஞர் மன்றத்தின் கலந்துரையாடல் கடந்த ஞாயிற்றுக்கிழமை பல தரப்பட்ட புத்திஜீவிகள், அருட்பணியாளர்கள் மற்றும் அருட்சகோதரிகள் ஆகியோரின் பங்குபற்றுதலில் நடைபெற்றது.

இதன்போதே கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தின் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- வடக்கில் உள்ள இளைஞர்களை போதைப்பொருள் பாவனையில் மாட்டிவிட்டு அவர்களின் ஆளுமையை அழிப்பதற்கும் உளரீதியாக அவர்களைக் கூறுபோடுவதற்கும் திட்டங்கள் தீட்டப்படுகின்றன.

இந்தச் செயற்பாட்டுக்கு இளையோர் இரையாகிவிடக்கூடாது. இளைஞர்கள் எப்போதும் நேர்வழியிலேயே செல்ல வேண்டும்.

இளமைப் பருவம் ஒரு துடிப்பு நிறைந்ததாகும் என்பதை யாவரும் அறிவர். இதன்போது உயிர்கொல்லி போதைப் பாவனைக்குள் அவர்களை சிக்க விடாது நல்ல திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல வழிவகுக்க வேண்டும். அவர்களின் வாழ்வும் சேவையும் அர்ப்பணிப்பும் சிறந்து விளங்க வழி காட்ட வேண்டும் - என்றார். (ச-60)



# பாரவூர்தி - வான் நேற்று விபத்து

கிளிநொச்சி, ஒக். 21

பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முல்லையடிப் பகுதியில் பாரவூர்தி - வான் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. இந்த விபத்துச் சம்பவம் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் நோக்கிச் சென்று கொண்டிருந்த பாரவூர்தியை பின்னால் வந்து கொண்டிருந்த வான் ஒன்று முந்திச்செல்ல முற்பட்ட வேளை விபத்து இடம்பெற்றிருக்கலாம் என்று பளை பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். விபத்தில் எவருக்கும் உயிர்ச் சேதம் ஏற்படவில்லை என்று தெரிவித்த பளை பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-14,113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார் மனிதப் புதைகுழி
# அகழ்வுக்கான தினத்தை அறிவிக்க கோரிக்கை

**மன்னார், ஒக். 21**

**மன்னார் சதொச மனிதப் புதைகுழியை மீண்டும் அகழ்வு செய்யும் தினத்தை பொலிஸார் மன்றுக்கு அறிக்கையிட கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.**

மன்னார் சதொச மனிதப் புதைகுழி அகழ்வை மீண்டும் ஆரம்பிப்ப தற்கு காணாமற்போன அலுவல கம் நிதி அனுசரணை வழங்க நட வடிக்கை முன்னெடுக்கப்பட் டுள் ளது. இதனால் அகழ்வுப் பணிகள் மீண்டும் விரைவில் ஆரம்பிக்கப்ப டலாம் என்று கருதப்படும் நிலையி லேயே, இந்த அகழ்வுப் பணிகளை எப்போது ஆரம்பிப்பது என்பது தொடர்பில் அறிக்கையிட வேண் டும் என்று மன்னார் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

2018ஆம் ஆண்டு மன்னார் நக ருக்குள் கண்டு பிடிக்கப்பட்ட சதொச மனிதப் புதைகுழி வழக்கு மன்னார் மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி அப்துல் சமட் கிபத்துல்லா முன்னி லையில் கடந்த திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள் ளப்பட்டது.

இதன்போதே மேற்படி உத்தரவிடப் பட்டது. இந்த உத்தரவின் அடிப்ப டையில் நவம்பர் மாதம் 30ஆம் திகதி வழக்கு விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்படும். இதன் போது அடுத்தகட்ட அகழ்வுப் பணி கள் தொடர்பில் பொலிஸார் நீதிமன் றத்தில் தெளிவாக அறிவிக்கவேண் டும். (ம-60)



## நானாட்டான் பிரதேசசபையில் சேதனப்பசளை தயாரிப்பு

மன்னார், ஒக். 21

நானாட்டான் பிரதேசசபை வளாகத்தில் சேதனப் பசளை தயாரிக்கும் பொறிமுறை, பிரதேசசபைத் தவிசாளர் தி.பரஞ்சோதியால் கடந்த செவ்வாய்க் கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது

இதன்மூலம் உள்ளூர் விவசாயிகளுக்குத் தேவை யான சேதனப் பசளையை வழங்கமுடியும் என தவிசாளர் தெரிவித்தார். (ஒ-14,213)

## மீன்களின் விலை திடீரென வீழ்ச்சி

யாழ்ப்பாணம், ஒக்.21

யாழ்ப்பாணத்தில் மீன்களின் விலையில் திடீரென வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

தற்போது எரிபொருள் சீராக வழங்கப்பட்டு வருவதால் மீனவர்கள் நாளாந்தம் மீன் பிடியில் ஈடுபட்டு வருகின்ற னர். அத்துடன், மழை காலம் ஆரம்பித்துள்ளதாலும் சந் தைகளுக்கு கூடுதலான கட லுணவுகள் கிடைக்கப்பெறு கின்றன. அதைவிட தற்போது கௌரிவிரதம் நடைபெறுவ தால் அநேகமானோர் கடலு ணவுகளைத் தவிர்த்து வரு கின்றனர்.

இதன் காரணமாகவே மீன்க ளின் விலையில் திடீர் சரிவு ஏற்பட்டுள்ளது என்று மீனவர் கள் தெரிவித்தனர். கடந்த வாரம் கிலோ ஆயிரம் ரூபாவாக விற்கப்பட்ட மீன் தற்போது கிலோ 600 ரூபாவாக வீழ்ச்சி யடைந்துள்ளது. (ஒ.14,17)



## கணித பாட ஆசிரியரை இடமாற்றம் செய்யாதீர்!

*கோணாவில் மகா வித்தி. மாணவர்கள் போராட்டம்*

கிளிநொச்சி, ஒக். 21

கிளிநொச்சி வடக்கு கல்வி வலயத்தின் கீழுள்ள கோணாவில் மகா வித்தியால யத்தில் கணித பாடம் கற்பிக்கும் ஆசி ரியர் ஒருவருக்கு காலம் நிறைவுறும் முன் இடம்மாற்றம் வழங்கப்பட்டதை எதிர்த்து மாணவர்கள் மற்றும் பெற்றோர் பாடசாலை முன்பாக கடந்த செவ் வாய்க்கிழமை கொட்டும் மழைக்கு மத்தியிலும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட னர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரி விக்கையில்;

முன்னைய காலத்தில் கணித பாடத் தில் மிகவும் குறைந்த 10, 20 புள்ளி களைப் பெற்று வந்த மாணவர்கள் தற்போது இடமாற்றம் செய்யப்பட்டுள்ள ஆசிரியரால் பயிற்றப்பட்டு கணித பாடத்தில் 80,90 புள்ளிகள் வரையில் மாணவர்கள் பெறுபேறுகளை எடுக் கின்றனர். இந்த நிலையில் குறித்த ஆசிரியருக்கு இடமாற்றம் வழங்கப்பட் டுள்ளமையால் எமது பிள்ளைகளின் கல்வி பாதிக்கப்படுகின்றது.

பின்தங்கிய கிராமத்திலுள்ள பாடசா லைகளுக்கு மாணவர்கள், பெற்றோர், கிராம மக்கள் மற்றும் கிராமப்புற அமைப்புக்களுடன் இணைந்து செயற் படக்கூடிய இவ்வாறான ஆசிரியர்கள் கிடைப்பது அரிது. ஆகவே குறித்த ஆசிரியரின் இடமாற்றத்தை நிறுத்தி மாணவர்களின் கல்வியைப் பாது காக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும்- என்றனர். (ச-113)



## அரசாங்கத்துக்கு எதிராக வவுனியாவில் கவனவீர்ப்பு

வவுனியா, ஒக். 21

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வவு னியா பழைய பேருந்து நிலைய முன்றிலில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கவனவீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் வன்னி பிராந்தியத்தின் ஏற்பாட்டில் போராட்டம் முன் னெடுக்கப்பட் டது.

"அரசே அபகீர்த்தியான பயங்கரவாதத் தடைச்சட் டத்தை உடனே நீக்கு", "அரசே மாகாண சபை களுக்கான அதிகாரங்களை முழுமைப்படுத்து", "அரசே மாகாண சபைகளுக்கான தேர்தலை உடனடியாக நடத்து", "தோட்டத்தொழிலாளர்களின் சம்பளம் நில வீட்டு உரிமையை உறுதி செய்", "வடக்கு-கிழக்கு மத இனவாத நோக்கிலான தொல் பொருள் தேடுதல்களை உடனடியாக நிறுத்து" உள்ளிட்ட வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். (ஒ-14,18)

## இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** சங்கடம் விலகும். எதிர்பார்ப்பு நிறைவேறும். மகிழ்ச்சி அதிகரிக்கும். நீங்கள் திட்டமிட்டு செயற்படும் காரி யத்தில் நினைத்ததை சாதிப்பீர்கள். வருமானம் அதிகரிக்கும்.

**இடபம்:** துணிச்சலாக செயற்பட்டு உங்கள் வேலைகளை முடித்துக் கொள்வீர்கள். சில சங்கடங்களை சந்திக்க வேண்டி வரும். கவனம் அவ சியம்.

**மிதுனம்:** எண்ணம் ஒன்று பூர்த்தி யாகும். காலையில் முயற்சித்த செயல் திருப்தியளிக்கும். சகோதரர்கள் வழியில் நன்மை அதிகரிக்கும். எதிர்பார்ப்பு லாபம் தரும்.

**கடகம்:** உங்கள் செயல்கள் இழுபறி யானாலும் அதன்பின் பலிதமாகும். நெருக்கடி விலகும். பொருளாதார நிலை உயரும். செயலில் வெற்றி காண்பீர்கள்.

**சிம்மம்:** பொருளாதார நெருக்கடி விலகும். வியாபாரத்தில் இருந்து வந்த தடை விலகும். செலவுகள் கட்டுக்குள் வரும். உங்கள் எண்ணம் நிறைவேறும். பிரச்சினைகளிலிருந்து விடுபடுவீர்கள்.

**கன்னி:** அலைச்சலுடன் செலவுக ளும் அதிகரிக்கும். யோசித்து செயற் படுவது நன்மையாகும். உங்கள் முயற்சிகள் இழுபறியாகும். அரசு வழி யில் சாதகம் தோன்றும்.

**துலாம்:** எதிர்பார்த்த பணம் இன்று வந்து சேரும். செயல்களில் நன்மை யாகும். வியாபாரத்தில் இருந்து வந்த சங்கடங்கள் விலகும். எதிர்பார்த்த வருமானம் வந்து சேரும்.

**விருச்சிகம்:** தொழிலில் ஏற்பட்ட தடை விலகும். உங்கள் குடும்பத்தில் ஒருவர் பாராட்டப்பெறுவார்கள். வியா பாரத்தை விரிவு செய்வீர்கள். எதிர்பார்த்தவற்றில் நன்மை அடை வீர்கள்.

**தனுசு:** வருமானத்தில் இருந்த தடை அகலும் காலையில் ஏற்பட்ட குழப்பம் படிப்படியாக சரியாகும். பின்னர் தெளிவுடன் செயற்படுவீர்கள். நினைத் ததை சாதிப்பீர்கள்.

**மகரம்:** இன்றைய கோயில் வழிபாடு உங்களுக்கு மகிழ்ச்சியை தரும். தர்ம சங்கடத்திலிருந்து தப்பிப்பீர்கள். காலையில் சந்திராஷ்டமம் தொடங்கு வதால் செயல்களில் கவனம் தேவை.

**கும்பம்:** துணிச்சலுடன் செயற்பட்டு ஒரு முயற்சியில் வெற்றி காண்பீர் கள். வருமானம் அதிகரிக்கும். குடும் பத்தினருடன் ஏற்பட்ட சங்கடம் விலகும். எதிர்பார்ப்பு ஒன்று நிறைவேறும்.

**மீனம்:** வருமானத்தில் ஏற்பட்ட தடை விலகும். புதிய பொருள்களை வாங்கி மகிழ்வீர்கள். தடைபட்ட பணிகளை மீண்டும் தொடர்வீர்கள். மனதில் புதிய நம்பிக்கை பிறக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# நிறைவேறும் '22'

நீண்ட இழுபறியின் பின்னர் அரசமைப்பின் 22ஆவது திருத்தச்சட்ட வரைவு மீதான விவாதம் நாடாளுமன்றத்தில் நேற்று ஆரம்பமாகியுள்ளது. இன்று இதன் மீதான வாக்கெடுப்பு இடம்பெறவுள்ளது. சட்ட வரைவு மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேறும் வாய்ப்பு நேற்றுமுன்னிரவு வரையான நிலைவரங்களின் அடிப்படையில் இருந்தது. ஆனால், அரசியலில் எந்த நேரத்திலும் எதுவும் நடக்கலாம் என்பதால் எதையும் அறுதியிட்டுக் கூறமுடியாது. பெரமுன அரசாங்கத்துக்கு எதிரான மக்கள் போராட்டம் எழுச்சியடைந்து – உச்சமடைந்த போது, ஆளும்தரப்பு அரசியல்வாதிகள் வெளியில் தலைகாட்ட முடியாத சூழல் ஏற்பட்டிருந்தது. அப்போது ஆளும் தரப்பு அரசியல்வாதிகள் பலரும் 'சுடலைஞானம்' வந்தவர்கள் போன்று '20ஆம் திருத்தத்தை ஆதரித்து ஜனாதிபதிக்கு கட்டுமட்டில்லாத அதிகாரத்தை வழங்கிவிட்டோம். இதனாலேயே எல்லாம் கெட்டு குட்டிச்சுவராகிவிட்டது' என்று ஒப்பாரி வைத்தனர். பதவியிலிருந்து ராஜபக்சக்கள் தப்பியோடி, ஜனாதிபதியாக ரணில் தெரிவாகி, போராட்டக்காரர்கள் இருந்த இடம் தெரியாமல் அடக்கி ஒடுக்கப்பட்டுள்ள இந்தச் சூழலில், பெரமுன அரசியல்வாதிகள் மீண்டும் தங்கள் ஆட்டத்தைத் தொடங்கியுள்ளனர்.

நாட்டில் ஓரளவுக்காவது ஜனநாயகத்தை உறுதி செய்யும் 22ஆம் திருத்தச் சட்டவரைவு நிறைவேறுவதற்கு பெரமுனவினர் கூத்துக்காட்டி வந்தனர். 22ஆம் திருத்தச் சட்டத்தில் உள்ள, இரட்டைக் குடியுரிமையுடையவர்கள் தேர்தல்களில் போட்டியிட முடியாது என்ற சரத்தே அவர்களின் இழுத்தடிப்புக்கு காரணம். பெரமுனவின் நிழல் தலைவர் பஸில் ராஜபக்ச இரட்டைக் குடியுரிமை உடையவர். அவரது தாளத்துக்கு ஆடுபவர்களே பெரமுனவில் அதிகம். அவர்கள், இரட்டைக் குடியுரிமை சரத்து, பஸிலை இலக்கு வைத்தே கொண்டு வரப்பட்டது என்பதால் 22ஆம் திருத்தத்தை தாம் ஆதரிக்கமாட்டோம் என்று இரண்டு நாள்களுக்கு முன்னர் நடைபெற்ற ஆளும் கட்சிக் கூட்டத்திலும் தெளிவாகக் கூறிவிட்டனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரையில், 22ஆம் திருத்தச்சட்டம் நிறைவேறுவதை பதவிக்கு வருவதற்கு முன்னர்வரையில் வெகுவாக ஆதரித்தார். பதவிக்கு வந்த பின்னர், அதன் பவுசுக்கு அடிமையாகி, 22ஆம் திருத்தம் நிறைவேறினாலென்ன, விட்டாலென்ன என்ற மனப்போக்கில்தான் செயற்பட்டார். ஆனாலும் எதிரணிகள், 22ஆம் திருத்தம் தொடர்பில் ஒரு பொது நிலைப்பாட்டுக்கு வந்து சில நிபந்தனைகளுடன் ஆதரிக்கத் தயாராகியுள்ளன. நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற விவாதத்திலும், இந்த நிலைப்பாட்டை அவர்கள் வெளிப்படுத்தியுள்ளனர். ஆளும் தரப்பிலும் ஒரு சாரார் ஆதரிப்பார்கள் என்பதால் 22ஆம் திருத்தச் சட்டவரைவு மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் பெரும்பாலும் நிறைவேறுவது உறுதியாகியுள்ள நிலையில், பெரமுனவினர் நேற்றுமுன்னிரவு தாமும் ஆதரவு வழங்குவதற்கான நிலைப்பாட்டை எடுத்துள்ளனர்.

இன்றைய தினம் எந்தவொரு சிக்கலும் இல்லாமல் 22ஆம் திருத்தம் நிறைவேறுவதற்கான வாய்ப்புக்களே அதிகமாகக் காணப்படுகின்றன. ஆனால், அரசியல்வாதிகள் மக்கள் போராட்டத்தின்போது ஒரு நிலைப்பாட்டையும் அது இல்லாதபோது இன்னொருநிலைப்பாட்டையும் எடுக்கின்றனர். இந்தப் போக்கு மாறவேண்டும். இனியாவது தமக்கு விசுவாசமானவர்களை தேர்தலில் தெரிவு செய்ய மக்கள் தயாராகவேண்டும்.

**நாளொரு நல்வார்த்தை**

"சூழ்நிலை நம்மை மாற்றக் கூடாது, நாம் தான் அந்த சூழ் நிலையை மாற்ற வேண்டும்"

- ஜாக்கி ஜான்



# வடக்கு-கிழக்குப் பல்கலை தமிழ் மாணவர் ஒன்றியம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக்.21

**யாழ்ப்பாணப் பல்கலைக் கழகமும், கிழக்குப் பல்கலைக் கழகமும் இணைந்து வடக்கு-கிழக்கு பல்கலைக் கழக தமிழ் மாணவர் ஒன்றியம் என்ற அமைப்பை ஆரம்பித்துள்ளனர்.**

வடக்கு, கிழக்கில் உள்ள பல்கலைக்கழகங்களில் உள்ள அனைத்து தமிழ் மாணவர்களையும் ஒன்றிணைத்து பலம்வாய்ந்த ஒரு அமைப்பாக இந்த ஒன்றியம் உருவாக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

ஒன்றியத்தின் தலைவராக கிழக்கு பல்கலைக் கழகத்தின் கலை கலாசார பீடத்தின் தலைவர் நி.தர்சனும், செயலாளராக யாழ். பல்கலைக் கழகத்தின் மாணவர் ஒன்றியத் தலைவர் அ.விஜயகுமாரும், பொருளாளராக யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பிரதீபனும், ஊடகப் பேச்சாளராக யாழ்.பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த இராசரத்தினம் தர்சனும், செயற்பாட்டு உறுப்பினராக கிழக்கு பல்கலைக்கழக மாணவி அனுஸ்திகவும் ஒருங்கிணைப்பாளராக, யாழ். பல்கலையின் கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் சி.ஜெல்சினும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (எ-125)

# சட்டக் கல்லூரிப் பரீட்சை மும்மொழிகளில் தேவை!

## நாடாளுமன்றில் மனோ வலியுறுத்து

1956 இல் சிங்களம் மட்டும் சட்டம் கொண்டு வந்ததைப் போன்று, இன்று ஆங்கிலம் மட்டும் சட்டம் கொண்டு வருகின்றீர்களா? அதென்ன எதையெடுத்தாலும் 'மட்டும்' என்கிறீர்கள்?

-இவ்வாறு நேற்று நாடாளுமன்றத்தில் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவிடம் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் கேள்வி எழுப்பினார்.

சட்டக்கல்லூரிப் பரீட்சை ஆங்கிலத்தில் மட்டும் எழுதப்படுவது என்ற புதிய விதி பற்றிய சர்ச்சை நாடாளுமன்றத்தில் எழுந்த போது அதில் தலையிட்டு நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் மேலும் கூறியதாவது:-

இலங்கையில் தமிழ், சிங்களம் இரண்டும் தேசிய மற்றும் ஆட்சி மொழிகள். ஆங்கிலம் இணைப்பு மொழியாகும். இந்த மூன்றில் விரும்பிய ஒரு மொழியில் பரீட்சை எழுத சட்டக்கல்லூரி மாணவர் அனுமதிக்கப்பட வேண்டும். ஆங்கிலம் அவசியம்தான். ஆனால், ஆங்கிலம் மட்டும் என்றால் அது கொழும்பில் உள்ள ஒரு வகுப்புக்கு மட்டுமே உதவிடும் - என்றார். (எ-22)

# 6 அத்தியாவசிய பொருள்கள் சதொசவில் விலை குறைப்பு!

## *கோதுமை மா ரூ.320*

கொழும்பு, ஒக். 21

'சதொச' நிறுவனம் ஆறு அத்தியாவசிய பொருள்களின் விலைகளைத் குறைத்துள்ளது. அதன்படி பூடு கிலோ 60 ரூபாவால் குறைக்கப்பட்டு 490 ரூபாவாகவும், கோதுமை மா கிலோ 55 ரூபாவால் குறைக்கப்பட்டு 320 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றது.

நெத்தலிக் கருவாடு கிலோ 50 ரூபாவால் குறைக்கப்பட்டு ஆயிரத்து 450 ரூபாவாகவும் பருப்பு கிலோ 30 ரூபாவால் குறைக்கப்பட்டு 285 ரூபாவாகவும் சீனி கிலோ 15 ரூபாவால் குறைக்கப்பட்டு 260 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகிறது. மேலும், இறக்குமதி செய்யப்பட்ட வெள்ளை அரிசி கிலோ 5 ரூபாவால் குறைக்கப்பட்டு 169 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது என சதொசவால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

| | | |
|---|---|---|
| **நாளை** | 22.10.2022 சனிக்கிழமை ஐப்பசி 5 | சுபநேரம் : 03.02 – 04.32 ராகுகாலம்: 09.02 – 10.32 சனிப் பிரதோஷ விரதம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னிறைவு பொருளாதாரம் காண எமது மண்ணில் குடியேற்றுங்கள்

## பலாலி கிழக்கு அபிவிருத்திச் சங்கம் மனு

யாழ்ப்பாணம், ஒக். 21

**தன்னிறைவுப் பொருளாதாரம் ஈட்டும் எமது பூர்வீக நிலங்களை விடுத்து நாம் மீள்குடியேறவும் விவசாயம் செய்யவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்துக்குக் கொண்டு செல்ல யாழ்.மாவட்டச் செயலர் ஆவன செய்ய வேண்டும் என பலாலி கிழக்கு அபிவிருத்திச் சங்கத்தால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

இதுதொடர்பில் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள அறிக்கையில் உள்ளதாவது:

இன்று நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலையை உள்ளூர் உற்பத்திகள், விவசாயம் ஆகிய தன்னிறைவுப் பொருளாதாரம் மூலமே கட்டியெழுப்ப முடியும். 30 வருட காலமாகப் பலாலி மக்களது வாழ்விடங்கள் அரசாங்கத்தால் விடுவிக்கப்படாது இராணுவத்தினர் வசமுள்ளன.

பலாலிப் பகுதியில் பழங்கள், நெல், குரக்கன், மரவள்ளி, எள்ளு, உழுந்து, பயறு, வெங்காயம், புகையிலை போன்ற பயிர்ச் செய்கைக்கு ஏற்ற மண்வளம் உள்ளமை யாவரும் அறிந்ததே. ஆனால், தன்னிறைவுப் பொருளாதாரம் ஈட்டும் எம் மண் இன்று இராணுவத்தினர் வசம் தரிசு நிலங்களாகவும் பற்றைக்காடுகளாகவும் எதுவித தேவையுமின்றி காணப்படுகின்றன. ஆகவே, இந்த விடயத்தை ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டுசென்று எம் மண்ணை மீட்டு எம்மை மீள்குடியேற்ற சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றுள்ளது. (ச)

## தெரிவுப்பரீட்சை

யாழ்ப்பாணம், ஒக். 21

வடமாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சி அலகால் நடத்தப்பட்டு வரும் பெறுகை நடைமுறைகள் மற்றும் ஒப்பந்த நிர்வாகம் தொடர்பான சான்றிதழ் கற்கைநெறிக்கான தெரிவுப்பரீட்சை எதிர்வரும் 26ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

அனுமதி அட்டைகள் இதுவரை கிடைக்கப்பெறாத அலுவலர்கள் தொலைபேசி இலக்கம் 0217391252, தொலைநகல் 0213382006, மின்னஞ்சல் npmdti@gmail.com ஆகியவற்றின் ஊடாக தொடர்புகொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-14)



## கந்தசஷ்டி உற்சவம்

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலில் கந்தசஷ்டி உற்சவம் எதிர்வரும் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

கந்தசஷ்டி விரதம் இருக்கும் அடியார்கள், உற்சவத்தின் இரண்டாம் நாளான 26 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு தெர்ப்பை பெற்று விரதத்தை மேற்கொள்ளலாம் என்றும் அன்றையதினமே வைபவரீதியாக திருச்செந்தூர் புராணப் படிப்பும் ஆரம்பமாகும் எனவும் ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது.

விரத உற்சவங்கள் தினமும் முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் 12.30 மணி வரை இடம்பெறும். தொடர்ந்து ஏழுநாள்கள் நடைபெறவுள்ள கந்தசஷ்டி உற்சவம் எதிர்வரும் 31 ஆம் திகதி திங்கட்கிழமை திருக்கல்யாண வைபவத்தோடு நிறைவடையும். (ஒ-14-20)



## கால்நடைகளை ஏற்றியவர் கைது!

யாழ்ப்பாணம், ஒக். 21

அனுமதிப்பத்திரமின்றி இரண்டு மாடுகள் மற்றும் மூன்று ஆடுகளை அச்சுவேலி நோக்கி லொறியில் ஏற்றிச்சென்ற சந்தேகநபர் கடந்த செவ்வாய்க்கிழமை கைதுசெய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நீர்வேலி கணதேவி ஆலயத்துக்கு அருகில் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் அராலி வீதியைச் சேர்ந்த முகமது மொஹிதீன் நாசர் என்பவரே சந்தேகநபராக கைது செய்யப்பட்டார். (ஒ-14-125)

## தொழில் முயற்சியாளர் விற்பனைக் கண்காட்சி

கிளிநொச்சி, ஒக். 21

சிறுதொழில் முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருள்களுக்கான விற்பனைக் கண்காட்சி கிளிநொச்சி பசுமைப் பூங்கா வளாகத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் ஏற்பாட்டில் 'கிளிநொச்சியில் உள்ள முயற்சியாளர் 2022' எனும் தொனிப்பொருளில் இந்தக் கண்காட்சி இடம்பெறுகிறது.

கிளிநொச்சி மாவட்ட காணி மேலதிக மாவட்டச் செயலர் திருலிங்கநாதன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்டச் செயலர் றூபவதி கேதீஸ்வரன், கிளிநொச்சி மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் க.சிறிமோகன் ஆகியோர் கலந்துகொண்டு கண்காட்சியை ஆரம்பித்து வைத்தனர். (ச-113)



## 6,060 ஏக்கர் நிலப்பரப்பில் வவுனிக்குளத்தில் செய்கை

மன்னார், ஒக். 21

முல்லைத்தீவு - வவுனிக்குளத்தின் கீழ் இந்த வருடம் 6 ஆயிரத்து 60 ஏக்கர் நிலப்பரப்பின் கீழ் நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது என்று பெரும்போகம் தொடர்பான கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது.

நடப்பு ஆண்டுக்கான பெரும்போகப் பயிர்ச்செய்கை தொடர்பான கலந்துரையாடல் வவுனிக்குள நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

இதன்போதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

வவுனிக்குளத்தின் கீழ் இந்தக் காலபோகத்தின்போது 6 ஆயிரத்து 60 ஏக்கர் நிலப்பரப்பில் 2ஆயிரத்து 260 பங்காளர்களால் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்தப் பயிர்ச்செய்கைக் காலத்தில் கால்நடைகளை கட்டிவளர்க்குமாறு பண்ணையாளர்களுக்கு அறிவுறுத்துவதுடன் மீறுவோருக்கு எதிராகத் தண்டப்பணம் அறவிடுவது தொடர்பிலும் தீர்மானிக்கப்பட்டது. மேலும், இந்த முறை 70 வீதம் யூரியா மற்றும் 30 வீதம் இயற்கைப் பசளை என்ற அடிப்படையில் உரம் வழங்கவும் ஆலோசிக்கப்பட்டது.

இந்த நெற்பயிர்ச்செய்கை அறுவடையை அடுத்தாண்டு மார்ச் மாதத்துடன் முடிவுறுத்த வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டச் செயலர் க. விமலநாதன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் ந.ரஞ்சனா, துறைசார்ந்த திணைக்கள அதிகாரிகள் மற்றும் விவசாயிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-213)

## வாகன இலக்கத்தகடுகளின் பட்டியல் மக்கள் பார்வைக்கு

யாழ்ப்பாணம், ஒக். 21


மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத் தலைமை அலுவலகத்திலிருந்து கடந்த 13 ஆம் திகதி யாழ்.மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்கள அலுவலகத்துக்குக் கிடைக்கப்பெற்ற வாகன இலக்கத்தகடுகளின் பட்டியல், யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களிலும் மாவட்ட செயலகத்திலுள்ள மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்திலும் பொதுமக்களின் பார்வைக்காக அறிவிப்புப் பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் மாவட்டச்செயலக இணையத்தளத்திலும் பார்வையிடலாம்.

https://dmtappointments.dmt.gov.lk என்ற இணையத்தளத்தில் பிரவேசிப்பதன் ஊடாக அல்லது 0212117116 என்ற தன்னியக்க தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்வதன் மூலம் திகதியையும் நேரத்தையும் முற்பதிவு செய்யுமாறு அறிவித்துள்ளனர்.

அதன்பின்னர் தங்கள் அலைபேசிக்கு மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தால் அனுப்பப்படும் குறுந்தகவலுடன், புதிதாக வாகனங்களைப் பதிவு செய்த உரிமையாளர்கள் வாகனப் பதிவுப்புத்தகம், தேசிய அடையாள அட்டை என்பவற்றையும், மாகாணங்களுக்கிடையே வாகன உரிமை மாற்றம் பெற்றவர்கள் மேற்குறித்த இரு ஆவணங்களுடன் பழைய வாகன இலக்கத்தகடுகள் மற்றும் வாகன இலக்கம் பொறித்த ஒட்டும் தாள் என்பவற்றையும், யாழ். மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்து அலுவலகத்தில் குறிப்பிடப்பட்ட திகதியில் குறித்த நேரத்துக்கு சமர்ப்பித்து தங்கள் வாகனங்களுக்குரிய இலக்கத்தகடுகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் அறிவித்துள்ளனர். (ஒ-14)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கண்ணீருடன் 31 ஆம் நாள் நினைவுகளும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 21.09.2022 அன்று
இறைபதமடைந்த எமது அன்புத்
தெய்வம்

அமரர்

## கனகலிங்கம் மகேந்திரராஜா

(ஓய்வுநிலை பணியாளர்,
யாழ்.போதனா மருத்துவமனை )

தோற்றம்
29.03.1953

மறைவு
21.09.2022

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (21.10.2022) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும் இந்நிகழ்வில் தாங்களும் கலந்து கொண்டு கிரியைகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொள்வதுடன் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.**

**குடும்பத்தினர்**
**ரஞ்சன் தக்ஷினி (மகள் - London)**
**077 248 7878**

**கந்தையா வீதி,**
**சாவகச்சேரி.**

(CR 38324) (3/6)

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
14 . 11 . 1956

மறைவு
21 . 10 . 2018

## பேரின்பநாதன் சாரதாதேவி (லலி - வேலணை)

**கண்களில் ஈரம் காயவில்லை...**

வருடங்கள் நான்கு ஆகியதே.... அம்மா
மனதினில் காயங்கள் ஆறவில்லையே...
உருவம் தந்த தாயின்
உருவம் தேடி அலைகின்றோம்....

ஒவ்வொரு நாளும் புதிதாகினாலும்
வருடங்கள் பல போனாலும்
லலியின் பிள்ளைகள் என்ற
அடையாளம் ஒன்றே போதும் அம்மா....

நம் வாழ்வின் ஒவ்வொரு நாளும்
நாம் தாய் தந்த அற்புதமான நாட்கள்
உங்களின் அற்புதமான வாழ்க்கையே
எங்கள் வாழ்க்கைக்கு பாடமாகியது ....

நினைவுகளுக்கும் உயிருண்டு என்பார்கள்
என் அம்மாவின் நினைவுகளோடு
நாம் கதைபேசி கலங்கும் போதே
அம்மா எம் அருகில் இருப்பதை உணர்கின்றோம்...

ஆயிரம் உறவு நம் வாழ்வில் வந்தாலும்
தாய் என்ற உறவு மீண்டும் வருமா....?
எம் அம்மாவின் ஆறுதல் வார்த்தையின்
புத்துயிர் நம் வாழ்வில் மீண்டும் கிடைக்குமா...?

மீண்டும் ஒருமுறை கவலையின்றி
நாம் கூடி வாழ்ந்திடுவோம்...
உங்கள் பிள்ளைகளின் தவிப்பைத் தீர்க்க
எங்களிடம் வந்து விடுங்கள் அம்மா....

**தாய் மடிக்கு ஏங்கும் பிள்ளைகள்**
**பிரசாந்தன் (யாழ்), துசிக்கா (கனடா), று[illegible]**

# அருள் மிகு தச்சன்தோப்பு சிந்தாமணிப் பிள்ளையார் ஆலயம்

கரவெட்டி

## கந்தபுராணபடனம் - பூர்த்திஉற்சவம்

சனிக்கிழமை (22.10.2022) காலைப் பூசையைத் தொடர்ந்து **“வள்ளியம்மை திருமணப்படலம்”** படனமும் மாலை பூர்த்தி உற்சவமும் நிகழத்திருவருள் கிட்டி உள்ளது அடியார்கள் வந்து கலந்து திருவருள் பெற்று உய்யும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

**ஆலய நிர்வாக சபையினர்**

(CR 38328) (3/6)

# வவுனியாப் பல்கலைக்கழகம்

## சிற்றுண்டிச்சாலைகளை நட த்துவதற்கு கேள்வி மனுக்கோரல்

வவுனியாப்பல்கலைக்கழகத்தினுடைய கீழ்காணும் பகுதிகளில் சிற்றுண்டிச் சாலைகளை நடத்துவதற்கான கேள்வி மனுக்கள் கோரப்படுகின்றன.

| கேள்வி மனு இல | கேள்விமனு தலைப்பு | விபரம் |
|---|---|---|
| 01 | வவுனியாப் பல்கலைக்கழக பிரதான வளாக சிற்றுண்டிச்சாலைகள் | பிரதான வளாக பிரயோக விஞ்ஞான பீட மற்றும் வியாபார கற்கைகள் பீட பகுதிகளில் அமைந்துள்ள இரு சிற்றுண்டிச் சாலைகளையும் நடத்துதல் |
| 02 | வவுனியா வளாக மாணவர் விடுதிச் சிற்றுண்டிச்சாலைகள் | ஆண்கள் மற்றும் பெண்கள் விடுதிகளில் அமைந்துள்ள இரு சிற்றுண்டிச்சாலைகளையும் நடத்துதல் |

விண்ணப்ப முடிவுத்திகதி 01.11.2022. மேலதிக விபரங்களுக்கு https://vau.ac.lk எனும் இணையத்தளத்தை அணுகவும்.

**பதிவாளர்,**
**வவுனியாப் பல்கலைக்கழகம்**

(CR 38327) (3/6)

# 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்



மலர்வு
29 - 08 - 1990

உதிர்வு
08 - 09 - 2022

கடந்த 08.09.2022 ஆந் திகதி அகாலமரணமடைந்த
எமது குடும்ப குல விளக்கு

## அமரர் கிருஷ்ணகுமார் சரவணபவன்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (20.10.2022) வியாழக்கிழ மை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்க்கரையில் நடைபெற்றது. நாளை (22.10.2022) சனிக்கிழமை அன்னாரது கொக்குவில் இல்லத்தில் சபீண்டிகரண கிரியகள் நடைபெறும். அத்துடன் நாளை மறுதினம் (23.10.2022) ஞாயிற்றுக்கிழமை **நல்லூரில் அமைந்துள்ள துர்க்கா மணி மண்டபத்தில்** முற்பகல் 11.00 மணியளவில் இடம் பெறும் அன்னாரது ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் கலந்து கொண்டு அன்னாரது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதோடு அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**தயவு செய்து இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு தங்களை அன்புரிமையுடன் கேட்டுக் கொள்கின்றோம்**

**3/6, பழைய தபாற்கந்தோர் வீதி,**
**கொக்குவில் கிழக்கு.**

**அன்பரங்கம்,**
**மாதகல்.**

**குடும்பத்தினர்**
**திரு.சு.கிருஷ்ணகுமார் - தந்தை**
(ஓய்வுநிலை வலயக் கல்விப் பணிப்பாளர்
தென்மராட்சி கல்வி வலயம்)
(Country Director IMHO - USA)

(CS 47192) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசக முற்றோதலுக்கு கோணேஸ்வரம் பயணம்

திருக்கோணேஸ்வர ஆலயத்தில் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகவுள்ள திருவாசக முற்றோதலுக்கு அகில இலங்கைத் திருமுறை மன்றத்தால், இன்று வெள் ளிக்கிழமை பஸ் பயணம் மேற்கொள் ளப்படவுள்ளது.

அதற்கமைய இணுவில் கந்தசுவாமி ஆலய வாசலில் இருந்து மாலை 5 மணிக்கு பஸ் புறப்பட்டு காங்கேசன் துறை வீதியூடாக துர்க்கா மணிமண்ட பம் சென்று அங்கிருந்து மாலை 5.30 மணிக்குப் பின் பயணம் ஆரம்பமாகும். ஆகையால் திருவாசக முற்றோதலில் பயின்ற ஓதுவார்கள் இந்தப் பயணத்தில் கலந்துகொள்ளலாம் என்று அகில இலங் கைத் திருமுறை மன்றத்தினர் அறிவித் துள்ளனர். (ஒ-14)

# மருதமடு குளத்தின் குளக்கட்டு சீரமைப்பு



முல்லைத்தீவு, ஒக். 21

முல்லைத்தீவு மாவட்ட புதுக்குடியி ருப்பு பிரதேசத்துக்குட்பட்ட மருதமடுக் குளத்தின் அணைக்கட்டு உடைப் பெடுக்கும் அபாயத்தை தடுக்கும் முகமாக அதனைச் சீர்செய்யும் நடவ டிக்கை நேற்றுமுன்தினம் முன்னெடுக் கப்பட்டது.

மழைகாலத்தை முன்னிட்டு குளக்கட்டை பாதுகாக்குமாறு மக்களால் கமக்கார அமைப்பினருக்கு முன்வைக்கப்பட்ட கோரிக்கையையடுத்து இந்தப் புனர மைப்புப் பணி மேற்கொள்ளப்பட்டது. இதன்போது இராணுவத்தினர் மற் றும் கமக்கார அமைப்பினர், நன்னீர் மீன்பிடி சங்கத்தினர் மற்றும் அப்ப குதி மக்கள் இணைந்து குளத்தின் அணைக்கட்டைப் புனரமைத்தனர். (ச-19)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

"ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்"
யோவான் 12:26








எமது றெயின்போ திருச்சபை ஊழியர்களான
போதகர் துரைராசா ஜெகதீபன், போதகர் குமரகுருபரன் ராஜ்குமார், போதகர் மகேந்திரம் ஜொனிபேட் ஆகியோர் இன்று (21.10.2022) போதகர் ஜிம் நியூட்ன் (AFOCM.Global.Inc) அவர்களால் மாலை 4.30 மணிக்கு திருநிலைப்படுத்தப்படுகின்றனர். இவர்களை நாமும் எமது கிளைச்சபை விசுவாசிகளும் பாராட்டி வாழ்துகின்றோம்.

வாழ்த்துவோர் : றெயின்போ குடும்பம் - 077 711 0002

(cs 37667)(2.6)

# பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு விதைகள்



முல்லைத்தீவு, ஒக். 21

முல்லைத்தீவு, புதுக்கு டியிருப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில் 10 பெண் தலைமைத்துவ குடும் பங்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா பெறும தியான விதை தானி யங்கள் கடந்த செவ் வாய்க்கிழமை சங்கத் தின் தலைமை அலுவலகத்தில் வழங்கி வைக்கப் பட்டது.

நாட்டில் ஏற்பட் டுள்ள பொருளா தார நெருக்கடி மற்றும் உற்பத் தியை ஊக்கு விக்கும் முகமாக இந்த விதை தானியங்கள் வழங்கப்பட்டன. வடக்கு மாகாண கூட்டுறவு அபிவி ருத்தி வங்கியின் நிதிப்பங்களிப் பில் புதுக்குடியி ருப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங் கத்தின் கிராமிய வங்கி ஊடாக இந்த விதை தானியங்கள் கையளிக்கப்பட் டன. (ச-19)

## 35ஆம் ஆண்டு நினைவு தினம்




இந்திய இராணுவத்தினரால்.யாழ் போதனா வைத்தியசாலை மீது நடத்தப்பட்ட தாக்குதலில் அன்புலன் சாரதியான வைத்திலிங்கம் சண்முகலிங்கம் உள்ளிட்ட 21 பேர் படுகொலை செய்யப்பட்டு 35 ஆம் ஆண்டு நினைவு தினமான இன்று அவர்களது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

தகவல்:
திருமதி.சண்முகலிங்கம் குடும்பத்தினர்

## 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 25 - 02 - 1941



மறைவு 21 - 09 - 2022

கடந்த 21.09.2022 புதன்கிழமை சிவபதம் அடைந்த
எமது குடும்பத் தலைவர்

அமரர் விசுவலிங்கம் மகேந்திரன்
(ஓய்வுபெற்ற நில அளவையாளர்)

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (21.10.2022) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத் தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன்அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் பங்குபற்றியவர்களுக்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் கூறிய அனைவருக்கும் எமது நன்றி களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நீர்வேலி, மல்லாகம். (CS21312) (3/6)
குடும்பத்தினர்

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த (23.09.2022) வெள்ளிக்கிழமை
சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர்
சின்னையா சிவபாதம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 22.10. 2022 சனிக்கிழமை காலை 6.00 மணியளவில் முருகன் கோவிலடி. புலோலியில் இடம்பெற்று அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக் கரையில் கரைக் கப்படும்.

அதனைத்தொடர்ந்து வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 23.10.2022 ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடை பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளு மாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

குடும்பத்தினர்.

முருகன் கோவிலடி,
புலோலி வடமேற்கு, புலோலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதற்றத்துக்குரிய எல்லைகளில் போர் விமானம் இயக்கும் பெண்கள்

புதுடில்லி, ஒக். 21
இந்தியாவின் அருணாச்சலப் பிரதேசம் மற்றும் அசாம் மாநிலத்தின் கிழக்குப் பகுதியில் சீன எல்லைக்கு அண்மித்ததாக போர் விமானங்கள் மற்றும் ஹெலிகொப்டர்களை பெண்கள் அதிக அளவில் இயக்கி வருகின்றனர்.

பெண் விமானிகள் மற்றும் தரைப்படை அதிகாரிகள் நாடு முழுவதும் பணியமர்த்தப்பட்டுள்ளதாகவும், உலகின் மிக உயரமான போர்க்களமான சியாச்சின் பனிப்பாறை முதல் அருணாச்சல பிரதேசத்தில் உள்ள விஜயநகரில் உள்ள கிழக்குத் திசையில் தரையிறங்கும் தளம் வரை அனைத்து வகையான நிலப்பரப்புக்களிலும் துருப்புக்களிலும் அவர்கள் பணியாற்றி வருவதாகவும் இந்திய விமானப்படையின் கிழக்கு கட்டளை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தியாவின் முதல் ஆயுத அமைப்பு இயக்குநர் லெப்டினன்ட் தேஜஸ்வி குறிப்பிடுகையில்; கண்ணாடி கூரையை உடைத்து, நாட்டுக்கு சேவை செய்வதற்கான கனவுகள் நிறைந்த புத்திசாலித்தனமான பெண்கள் உள்ளனர். போர் விமானப் படையில் பெண்கள் இருப்பது தனித்துவமான அனுபவம் அல்ல. ஆண்கள் மற்றும் பெண்கள் உட்பட அனைவரும் சமமாக கடினமாக உழைக்கிறோம். பயிற்சி செய்கிறோம். நாங்கள் சம்மான நிலையில் இருக்கிறோம். வானத்திலும், தளத்திலும், நாங்கள் அனைவரும் முதன்மையான விமான வீரர்களாக செயற்படுகின்றோம் - என்றார்.

எங்களைப் பொறுத்தவரை, அவர்கள் பெண்கள் என்பதைவிடவும் முதலில் விமானப் போர்வீரர்கள், அவர்கள் ஒதுக்கப்பட்ட பணிகளைச் செய்ய இயந்திரங்களை நன்றாகக் கையாள வேண்டும். அதனை செவ்வனே செய்கின்றார்கள் என்று கிழக்குக் கட்டளை அதிகாரி ஒருவர் கூறினார்.

இந்திய விமானப்படையில் தரை மற்றும் விமானப் பணிகளில் ஆயிரத்து 300 க்கும் மேற்பட்ட பெண் அதிகாரிகள் பணிபுரிகின்றனர். படைகளில் அரசாங்கக் கொள்கை மற்றும் அக்னிவீர் திட்டத்தில் பெண்களை விமானப்படையினராக ஈர்ப்பதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-இ)

# தீபாவளியை முன்னிட்டு நடைபாதை வியாபாரம்

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு தென்பகுதியைச் சேர்ந்த பெருமளவு வியாபாரிகள், சாவகச்சேர நகரப்பகுதியில் நடைபாதை வியாபாரத்தை நேற்றுமுன்தினம் புதன்கிழமை ஆரம்பித்துள்ளனர்.

சாவகச்சேரி நகரசபையால் இந்த வருடம் நடைபாதை வியாபாரம் செய்வதற்கு அனுமதி வழங்கியதையடுத்து சாவகச்சேரி ரயில் நிலைய வீதியில் தென்பகுதி வியாபாரிகள் பலர் வியாபாரங்களை ஆரம்பித்துள்ளனர். உடைகள், பாதணிகள், அலங்காரப் பொருள்கள் எனப் பல்வேறு பொருள்களை சந்தைப்படுத்தியுள்ளனர். (ஒ-14-9)




## வடிசாராயத்துடன்...

தெய்வநாயகம் மேனன் தலைமையிலான யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாராலேயே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். வடிசாராயத்தைக் காய்ச்சுவதற்குப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் சந்தேகநபரிடமிருந்து மீட்கப்பட்டுள்ளன. சந்தேகநபர் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளார். (அ-ம-26)

## பதவி...

பதவி விலகல் தொடர்பில் பிரிட்டன் பிரதமர் தெரிவித்ததாவது:- கன்சர்வேடிவ் கட்சித் தலைவராக நான் தேர்தெடுக்கப்பட்டதற்கான நோக்கத்தை என்னால் நிறைவேற்ற முடியவில்லை. இதன் காரணமாக நான் கன்சர்வேடிவ் கட்சித் தலைவர் பதவியிலிருந்து விலகுவது குறித்து மன்னர் சாள்ஸிடம் பேசியுள்ளேன். அடுத்த வாரத்துக்குள் கட்சி தலைமைக்கு தேர்தல் நடத்தப்படும். இது நமது நிதித் திட்டங்களை வழங்குவதற்கும், நமது நாட்டின் பொருளாதார உறுதித்தன்மை மற்றும் தேசிய பாதுகாப்பை வலுப்படுத்தவும் உறுதி செய்யும் - என்றார்.

முன்னதாக, பொருளாதாரத்தை சரியாகக் கையாளவில்லை என்ற குற்றச்சாட்டில்தான் போரிஸ் ஜோன்சன் பிரதமர் பதவியிலிருந்து விலகினார். இந்த நிலையில், புதிய பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள லிஸ் ட்ரஸ் மிகக்குறைந்த நாள்களில் பதவியிலிருந்து விலகியுள்ளார். பொருளாதார மந்த நிலையில் இருந்து நாட்டை மீட்க முடியாத வகையில்தான் அவரது நிர்வாகத் திறன் இருந்துள்ளது என்றும் விமர்சனம் எழுந்துள்ளது. பிரிட்டன் அரசியல் வரலாற்றில் மிகக் குறுகிய காலம் பிரதமர் பதவி வகித்தவர் லிஸ் ட்ரஸ்தான். இரு மாதங்கள்கூட நிறைவு பெறாத நிலையில், அவர் அங்கம் வகிக்கும் கன்சர்வேட்டிவ் கட்சியால் மீண்டும் ஒரு பிரதமரை உடனடியாக தேர்வு செய்ய முடியுமா என்ற சந்தேகமும் குழப்பமும் பிரிட்டனில் நிலவுகிறது. இந்தக் குழப்பத்தை வலுப்படுத்தும் வகையில், கன்சர்வேட்டிவ் கட்சிக்கு ஆட்சியை தொடர்ந்து நடத்த உரிமை இல்லை என்றும், நாட்டில் பொதுத் தேர்தலை விரைந்து நடத்த வேண்டும் என்று எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சி குரல் எழுப்பியுள்ளது. (அ-ம)

## இரட்டைக்...

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'குழம்பிய குட்டையில் மீன்பிடிப்பதற்கு எதிரணிகள் முயற்சிக்கின்றன. அதற்கு இடமளிக்கமாட்டோம். இரட்டைக் குடியுரிமை தடைக்கு ஆதரவாக வாக்களிப்போம். பஸில் ராஜபக்சவுக்கு தேவையெனில் அவர் குடியுரிமையை துறந்துவிட்டு வரட்டும்' - என்றார். (அ-ம-44)

## '22' நிறைவேறும்...

கொண்டு உரையாற்றுகையிலேயே தமது ஆதரவை பொதுஜன உறுப்பினர்களான அமைச்சர் காஞ்சன விஜேசேகர, மஹிந்தானந்த அளுத்கமகே, பிரேம்நாத் சி தொலவத்த ஆகியோர் உறுதிப்படுத்தினர்.

விவாதத்தில் கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே,

'22 ஆவது திருத்தத்தைப் பயன்படுத்தி பெரமுனவுக்குள்ளும், அரசாங்கத்துக்குள்ளும் பிளவை ஏற்படுத்துவதற்கு எதிரணிகள் முயற்சித்தன. ஆனால், 22 நிறைவேறும். இதன்மூலம் எதிரணிகளின் கனவு கலைக்கப்படும்' - என்றார்.

'22 நாளை (இன்று) நிறைவேற்றப்பட வேண்டும் என்ற யோசனையை முன்வைக்கின்றேன். அதனைக் குழப்பியடிக்க எவரும் இல்லை' என்று அமைச்சர் காஞ்சன விஜேசேகர குறிப்பிட்டார். (அ-ம-44)

## நீதிமன்றத்தால்...

பட்டார். குருநகர் பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய சந்தேகநபரே கைதுசெய்யப்பட்டவராவார்.

2021ஆம் ஆண்டு குறித்த சந்தேகநபருக்கு எதிரான ஹெரோய்ன் தொடர்பான வழக்கொன்று மல்லாகம் நீதிமன்றத்தில் நடைபெற்ற வேளையில், நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டுக்காக அவருக்கு எதிராகப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையிலேயே குறித்த சந்தேகநபர் குருநகர் ஐந்துமாடிப் பகுதியில் தலைமறைவாகியிருந்த நிலையில் பொலிஸாரால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டார். சந்தேகநபரிடமிருந்து 80 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப்பொருளும் மீட்கப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டவர் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதோடு மேலதிக விசாரணைகளின் பின் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார். (அ-ம-26)

## கோதுமை மா இனி...

இதன்படி, 290 ரூபாவாக இருந்த ஒரு கிலோ கோதுமை மாவின் விலை 265 ரூபாவாகக் குறைவடைந்துள்ளது.

எனினும், பேக்கரி உற்பத்திப் பொருள்களின் விலை குறைக்கப்பட மாட்டாது என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. கடந்த வாரத்திலும் மாவின் விலை 110 ரூபாவால் குறைந்துள்ள போதிலும், பேக்கரி பொருள்கள் முன்னைய விலைக்கே விற்பனை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)


## ஹெரோய்ன்...

பொலிஸாரால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார். கைதுசெய்யப்பட்ட நபர் 20 வயதுடையவர். அவர், தீவகத்தில் ஹெரோய்ன் விற்பனையில் ஈடுபடும் முக்கியமான சூத்திரதாரி என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். சந்தேகநபரிடமிருந்து 35 மில்லிகிராம் ஹெரோய்ன் மீட்கப்பட்டுள்ளது. அத்துடன் பிறிதொரு சந்தேகநபர் தப்பியோடிய நிலையில் அவர் தேடப்பட்டு வருகின்றார் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ"

# மரண அறிவித்தல்



தோற்றம்
01.
01
1960

மறைவு
18
10
2022

## அப்பாக்குட்டி இரத்தினகுமார்
## (சின்னத்தம்பி)

மீசாலை வடக்கு கொடிகாமத்தை (தட்டாங்குளம் வீதி) பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அப்பாக்குட்டி இரத்தினகுமார் (சின்னத்தம்பி) அவர்கள் கடந்த 18.10.2022 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அப்பாக்குட்டி நல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், ஐயாத்துரை பத்தரின் பேரனும், இரட்ணராசா, இரட்ணலட்சுமி, இரட்ணேஸ்வரன், இரட்ணலிங்கம், இரட்ணமலர், இரட்ணறதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜெயகெங்கா, திலகரட்ணம், விஜயலக்சுமி, கிருஜா, ரவிவர்ணன் (பாப்பா), குகநாதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.10.2022) வெள்ளிக்கிழமை மு.ப. 11.30** மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக **வேம்பிராய்** இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தட்டாங்குளம்,**
**மீசாலை வடக்கு,**
**புத்தூர்ச் சந்தி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 21315) 1/6

# மரண அறிவித்தல்



தோற்றம்
29
05
1934

மறைவு
20
10
2022

## இராசையா சந்திரசேகரம்

குமரகோட்டம் கோண்டாவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா சந்திரசேகரம் அவர்கள் நேற்று (20.10.2022) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா-இராசம்மா தம்பதியரின் மகனும், கந்தையா - பாக்கியம் தம்பதியரின் மருமகனும், கமலாதேவியின் அன்புக் கணவரும், சந்திரமோகன் (கனடா), கௌசலா (வட மாகாண சுதேச மருத்துவ திணைக்களம்), மேகலா, சசிகலா (ஆசிரியர், வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மைதிலி (கனடா), லோகாநந்தன், சிவநாதன் (புத்தளம்), பாலமுகுந்தன் (ஆசிரியர், புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி) ஆகியோரின் மாமனாரும், ஷாம்பவி, ஆதுஷி (கனடா), ஆதிரா (கனடா), ஆதித்தன் (கனடா) ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து, இரத்தினேஸ்வரி மற்றும் நடராஜா ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான சண்முகராஜா, மகேஸ்வரி மற்றும் மகாலட்சுமி, காலஞ்சென்றவர்களான சிவபாதம், சிவலிங்கம் மற்றும் சரோஜினிதேவி, சற்குணதேவி, நவமலர்தேவி ஆகியோரின் மைத்துனரும், சரோசா, பரமேஸ்வரி, விக்கினேஸ்வரன், பத்மினி, நகுலேஸ்வரன், மகாலட்சுமி, காலஞ்சென்ற விமலேஸ்வரன் மற்றும் தர்மசோதி ஆகியோரின் சிறிய தந்தையும், சாயிகுமார் (கனடா), திருமதி கோமதி சிவக்குமார் (வைத்திய கலாநிதி), திருமதி கௌரி பிரணவச்செல்வன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், முகுந்தன் (லண்டன்), சுகுந்தன் (வைத்திய கலாநிதி), காலஞ்சென்ற முகுந்தினி ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**077 1312 872 / +14168790037 /**
**074 0130 447 / 076 86 01077**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 21316) 1/6

# தொழில் முயற்சியாளர் விற்பனைக் கண்காட்சி

வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலகத்தின் கலாசார பேரவையின் புதிய நிர்வாக சபைத் தெரிவு கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

தலைவராக பிரதேசசெயலர் சுபாஜினி மதியழகன், உபதலைவராக கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி முதல்வர் ச.லலீசன், செயலாளராக கலாசார உத்தியோகத்தர் ஜெயதாஸ், உப செயலாளராக ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் செ.விசுவலிங்கம், பொருளாளராக ஓய்வுநிலை அதிபர் மு.விக்னேஸ்வரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.எழுத்தாளர் வட கோவை வரதராஜன், யாழ்.பல்கலைக்கழக நடனத்துறை முதுநிலை விரிவுரையாளர் சத்தியப்பிரியா, வில்லிசைக் கலைஞர் சத்தியதாஸ், ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.குணநாதன், நடனத்துறை ஆசிரியர் நல்லினி சிவராம் உள்ளிட்ட 14 பேர் கொண்ட நிர்வாக சபையும் அமைக்கப்பட்டது. (ஓ-14-27)

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம்
23
10
1972

மறைவு
21
09
2022

கடந்த (21.09.2022) புதன்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவி

## அமரர் சுதாஜினி லவநேசகுமார்

அவர்களின் அந்தியேட்டிக்கிரியை இன்று (21.10.2022) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 23.10.2022 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மரணச்செய்தியறிந்து நேரிலும் தொலைபேசியூடாகவும் ஆறுதல் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**"இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்."**

**சேர் சரவணமுத்து,**
**மானிப்பாய் வீதி, உடுவில்.**

**குடும்பத்தினர்.**

(CS 21317) 1-6

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மலர்வு
03
04
1944

உதிர்வு
21
09
2022

கடந்த 21.09.2022 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது அன்னை

## அமரர்
## இராசரத்தினம் சின்னத்தங்கம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (21.10.2022) வெள்ளிக்கிழமை காலை 5.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், எதிர்வரும் 23.10.2022 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் பன்னாலை வரத்தலம் கற்பக விநாயகர் ஆலய மண்டபத்தில் இடம்பெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**[illegible] வீதி, தெல்லிப்பழை,**
**தொ.இல.021 205 9205**

**குடும்பத்தினர்.**

(CS 21318) 1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 22 ஆதரிப்பதற்கு...

நாடாளுமன்றத்தில் நேற்று ஆரம்பமான 22 ஆவது திருத்தச் சட்டத்தின் இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உரையாற்றும்போதே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

'நாம் ஆராய்ந்த விதத்தில் ஒப்பீட்டளவில் 20 ஆவது திருத்தத்தைவிட 22 ஆம் திருத்தத்தில் சில நல்ல விடயங்கள் உள்ளன. இதில் சில மாற்றங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. எனவே, 22 ஆவது திருத்தம் தொடர்பில் மிகவும் நேர்மையாகச் செயற்படுவதாயின் இந்தத் திருத்தத்துக்கு நாம் சில நிபந்தனைகள் அடிப்படையில் ஆதரவளிக்கத் தயாராகவுள்ளோம்.

அரசமைப்பு பேரவைக்கான உறுப்பினர்கள் நியமனத்தின்போது, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவரின் இணக்கத்துக்கமைய தெரிவு இடம்பெறவேண்டும். அத்துடன், இரட்டைப் பிரஜாவுரிமை தொடர்பில் 22 ஆவது திருத்தச் சட்டவரைவில் உள்ள சரத்தில் ஒரு துளியேனும் மாற்றம் ஏற்படக்கூடாது என்பதை நாம் வலியுறுத்துகின்றோம். இதில் சிலரின் தனிப்பட்ட நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப திருத்தங்களைக் கொண்டுவர முயற்சித்தால் நாம் அதனைக் கடுமையாக எதிர்ப்போம்.

இரண்டரை வருடங்களில் நாடாளுமன்றத்தைக் கலைக்க ஜனாதிபதிக்கு அதிகாரம் உண்டு என்று இந்தச் சட்டவரைவில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் எந்த மாற்றமும் ஏற்படக்கூடாது. அது அவ்வாறே இருந்தால் நாம் ஆதரவு வழங்குவோம். அத்துடன், ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்பட வேண்டும் என்ற ஒரு கோரிக்கையையும் நாம் முன்வைக்கின்றோம். இந்த நிபந்தனைகளின் அடிப்படையில் 22 ஆவது திருத்தத்தை ஆதரிக்க நாம் தயாராகவுள்ளோம்.

நாட்டை மேலும் வங்குரோத்து நிலைக்குத் தள்ள நாம் தயாரில்லை. எந்தக் காரணத்தைக் கொண்டும், இதில் மாற்றங்களை ஏற்படுத்த வரவேண்டாம். அந்தவகையில், மிகவும் நேர்மையாக, எதிர்க்கட்சி என்ற வகையில் ஐக்கிய மக்கள் சக்தி தமது ஆதரவை வழங்கும்' - என்றார். (அ-ம-22)

## உள்ளாட்சித்...

முயற்சிக்கு எதிராக எதிர்க்கட்சி அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புக்கள் கூட்டாக நேற்றுக் கையெழுத்திட்டன.

ஐக்கிய மக்கள் சக்தி, சுதந்திரக் கட்சி, தேசிய சுதந்திர முன்னணி, ஜனநாயக இடதுசாரி முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, பிவிதுரு ஹெல உறுமய உள்ளிட்ட எதிர்க்கட்சி அரசியல் கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளின் கூட்டம் ஜயவர்தனபுரவில் கடந்த 12ஆம் திகதி நடைபெற்றது. அதில் கலந்துகொண்ட கட்சித் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளின் ஏகோபித்த தீர்மானத்தின்படி இந்தக் கூட்டறிக்கை வெளியிடப்படுகிறது.

தேர்தல் சீர்திருத்தம் என்ற போர்வையில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைக்க அரசு முயற்சித்தால், தனித்தனி கட்சியாகவும், கூட்டாகவும் கடுமையாக எதிர்ப்பது என ஏகமனதாகத் தீர்மானம் எடுக்கப்பட்டதோடு, அந்த முடிவின் பிரகாரம், ஒரு பூர்வாங்க நடவடிக்கையாக அறிக்கையில் கையெழுத்திடப்பட்டது.

ஜனநாயகத்துக்கு எதிராக அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு எதிராக மதத் தலைவர்கள், சிவில் அமைப்புக்கள் மற்றும் தொழில் வல்லுநர்கள் உள்ளிட்ட தரப்புக்குத் தனித்தனியாக தெளிவூட்டுவதற்கும், மக்களுக்குத் தெளிவூட்டுவதற்கும், அதற்கு அப்பால் இந்தத் தன்னிச்சையான செயல்முறை குறித்து சர்வதேச சமூகத்துக்கும் தெரிவிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ-ம-22-44)

## செனட் முறை...

உள்வாங்குமாறு இந்தியா அழுத்தம் கொடுத்திருக்காது என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

அரசமைப்புக்கான 22 ஆவது திருத்தச் சட்டவரைவை நிறைவேற்றிக் கொள்வதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு வழங்க வேண்டும் எனவும் அவர் அழைப்பு விடுத்தார்.

அரசமைப்பின் 22 ஆவது திருத்தம் மீதான விவாதத்தை நாடாளுமன்றத்தில் நேற்று ஆரம்பித்துவைத்து உரையாற்றுகையிலேயே நீதி அமைச்சர் இவ்வாறு அழைப்பு விடுத்தார்.

இது தொடர்பில் நீதி அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது நாட்டில் 1947ஆம் ஆண்டு அரசமைப்பில் 'செனட் சபை' முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. பின்னர் 1972ஆம் ஆண்டு குடியரசு யாப்பில் அந்த முறைமை இல்லாமல் செய்யப்பட்டது. இந்த நிலையில் அந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் 1978 ஆம் ஆண்டு அரசமைப்பில் தேசியப்பட்டியல் ஊடாக 29 பேர் நாடாளுமன்றம் வருவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

புத்திஜீவிகள், நிபுணர்கள், தேர்தலில் போட்டியிட முடியாத நாட்டுக்குத் தேவையானவர்கள் நாடாளுமன்றம் வருவதற்கு தேசியப் பட்டியல் ஊடாகச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. இதன் நோக்கம் ஓரளவு நிறைவேறினாலும், தேசியப்பட்டியல் முறைமை கொண்டுவரப்பட்டதன் முழுமையான நோக்கம் நிறைவேறவில்லை.

இலங்கையில் நல்லிணக்கம் இல்லாமல் போனதற்கு செனட்சபை முறைமை நீக்கப்பட்டதும் பிரதான காரணமாகும். செனட் சபையில் அனைத்து இன பிரதிநிதிகளும் இருந்தனர். அவர்கள் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள். எனவே, மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பு இருந்தது. சிறுபான்மை இன மக்களும் தமக்குப் பாதுகாப்பாக அந்த முறைமையை நம்பினர். செனட் சபையிலும் தகுதியானவர்கள் இருந்தனர். அந்த முறைமை இல்லாததாலேயே அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தை, அரசமைப்புக்குள் உள்வாங்குமாறு இந்தியா அழுத்தம் கொடுத்து வருகின்றது.

நாடாளுமன்றத்துக்கு மேலாக இருந்த செனட் சபையை இல்லாது செய்ததால், நாடாளுமன்றத்துக்குக் கீழான மாகாண சபை முறைமை கொண்டுவரப்பட்டது. எனவே, அரசமைப்பு மறுசீரமைப்பு எப்படியான தாக்கங்களை ஏற்படுத்தும் என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும். அரசமைப்பு சார்ந்த பிரச்சினையாலேயே இந்த நாட்டில் நல்லிணக்கம் இல்லாமல் போனது, மோதல்கள் ஏற்பட்டன.

அதேவேளை, நான்கரை வருடங்களில் ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைக்கலாம் என்ற சரத்து 19ஆவது திருத்தச்சட்டத்தில் இருந்தது. 20ஆவது திருத்தச்சட்டத்தில் அந்தக் கால எல்லை இரண்டரை வருடமாக்கப்பட்டது. அதில் மாற்றம் செய்யவில்லை. 22 இலும் இரண்டரை வருடம் என்றே உள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர்களில் 113 பேர் இணைந்து தீர்மானமொன்றை நிறைவேற்றி, நாடாளுமன்றத்தைக் கலைக்குமாறு ஜனாதிபதியிடம் கோரலாம். அந்த ஏற்பாட்டிலும் கைவைக்கவில்லை' - என்றார். (அ-ம-44)

## பல்வேறு...

சேர்ந்த 27 வயதுடைய சந்தேகநபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டவராவார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் மோட்டார்சைக்கிள் திருடியமை, நெல்லியடி பொலிஸ் பிரிவில் மோட்டார் சைக்கிள் திருடியமை, ஒரு லட்சத்து 80 ஆயிரம் ரூபா பெறுமதியான ரயர் திருடியமை உள்ளிட்ட 14 குற்றங்களில் சந்தேக நபர் தேடப்பட்டு வந்துள்ளார். இந்த நிலையிலேயே அவர் நெல்லியடிப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் நெல்லியடி சந்தைப் பகுதியில் வைத்து நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார். (அ-ம-26)

## தமிழ்ப்...

எதிர்வரும் 24ஆம் திகதி திங்கட்கிழமை தீபாவளிப் பண்டிகை என்பதால், மறுநாள் செவ்வாய்க்கிழமை மாணவர்களின் வரவில் வீழ்ச்சி காணப்படும் என்பதைக் கருத்திற்கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்குப் பதிலாக எதிர்வரும் 29ஆம் திகதி சனிக்கிழமை தமிழ்ப் பாடசாலைகளில் கற்றல் நடவடிக்கைகள் நடைபெறும் எனவும் கல்வி அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது. (அ-ம-22)

## சகலரையும்...

களில் அதிருப்தி வெளியிட்ட மேலதிக நீதிவான் நளினி சுபாஸ்கரன், மூத்த பொலிஸ் அத்தியட்சகர் உரிய முறையில் விசாரணைகளை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தினார்.

யாழ்ப்பாணம் மாநகரில் மறைந்த தம்பதியரின் சார்பில் நிறைவேற்றப்பட்ட அறுதி உறுதியின் மூலம் காணி மோசடி இடம்பெற்றமை தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட யாழ்ப்பாணம் சிறப்புக் குற்ற விசாரணைப் பிரிவினர் ஒருவரைக் கைது செய்தனர்.

சந்தேகநபரை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நேற்று முற்படுத்திய பொலிஸார் 'பி' அறிக்கையை தாக்கல் செய்தனர். யாழ்ப்பாண மேலதிக நீதிவான் திருமதி நளினி சுபாஸ்கரன் முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு வந்தது.

சந்தேகநபர் இது போன்ற மோசடிகளில் ஏற்கனவே ஈடுபட்டுள்ளார். அவருக்கு எதிராக மூன்று வழக்குகள் நிலுவையில் உள்ளன. குறித்த காணி சந்தேகநபரால் வேறு ஒருவருக்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளது. எனவே விசாரணைகள் நிறைவடையாததால் சந்தேக நபரை விளக்க மறியலில் வைக்க உத்தரவிடுமாறும் பொலிஸார் சமர்ப்பணம் செய்தனர்.

சந்தேகநபர் சார்பில் மூத்த சட்டத்தரணி என். ஸ்ரீகாந்தா முன்னிலையாகி பிணை விண்ணப்பம் தொடர்பில் சமர்ப்பணத்தை முன்வைத்தார்.

'இந்த வழக்குடன் தொடர்புடைய சிலரிடம் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. எனினும் அவர்கள் கைது செய்யப்படாமல் சுதந்திரமாக நடமாடுகின்றனர். முழு மோசடியையும் எனது கட்சிக்காரர் மீது சுமத்தி மற்றவர்களைப் பாதுகாக்கும் விதத்தில் புலன்விசாரணை முன்னெடுக்கப்படுகின்றது. இயற்கை எய்திய இருவரின் கையொப்பங்கள் இடப்பட்டு காணியின் உரிமை மாற்றம் செய்வதற்கு எனது கட்சிக்காரரை தந்திரமாகப் பயன்படுத்தியுள்ளனர்.

உறுதியில் சாட்சிகளாக கையொப்பம் இட்ட இருவரில் ஒருவரே முதன்மைச் சூத்திரதாரி. இதில் பிரபல கல்லூரி ஒன்றின் முன்னாள் அதிபரும் சம்பந்தப்பட்டுள்ளார். கையூட்டு வழக்கு ஒன்றில் சந்தேகநபராக ஏற்கனவே பிணையில் அனுமதிக்கப்பட்டுள்ள அவர் போலிக் கையொப்பங்களில் ஒன்றையும் இட்டுள்ளார்.

மோசடியாக உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ள காணி பின்னர் இன்னொரு நபருக்கு மாற்றப்பட்டுள்ளது. முதல் உறுதியில் கையொப்பம் இட்ட ஒரு சாட்சி இரண்டாவது உறுதியிலும் அதே போன்று கையொப்பம் இட்டுள்ளார். இது தனி ஒரு மனிதர் மட்டும் செய்யக் கூடிய மோசடி அல்ல. இந்த கூட்டு நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்ட அனைவர் மீதும் நடவடிக்கை எடுக்காமல் எனது கட்சிக்காரரை மட்டும் குற்றவாளி ஆக்குவது எந்த வகையில் நியாயமாகும்?

முழு உண்மையும் வெளிக்கொணரப்பட வேண்டும். சிறப்புக் குற்ற விசாரணைப் பிரிவுப் பொலிஸார் நேர்மையாகச் செயற்படவில்லை. எனவே, சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம், உதவி பொலிஸ் அத்தியட்சகர் தரத்துக்கு குறையாத பதவி நிலை கொண்ட அதிகாரி ஒருவர் புலன் விசாரணையைப் பொறுப்பேற்க வேண்டும். அதற்கான பணிப்புரையை வழங்க நீதிமன்றம் முன்வரவேண்டும். சந்தேக நபர் சார்பில் பிணை விண்ணப்பம் ஒன்றை செய்வதற்கு பொறுமையோடு காத்திருக்க நான் தயார்' என்று மூத்த சட்டத்தரணி என். ஸ்ரீகாந்தா சமர்ப்பணத்தை முன்வைத்தார்.

சிறப்பு குற்ற விசாரணைப் பிரிவு நடத்தி வரும் புலன் விசாரணைக்கு கடும் அதிருப்தியை மன்று வெளியிட்டது. இறந்த தம்பதிகளின் பேரில் நிறைவேற்றப்பட்ட அறுதி உறுதியில் சாட்சிகளாக கையொப்பம் இட்ட இரண்டு நபர்கள் மற்றும் உறுதியை நிறைவேற்றிய நொத்தாரிசு ஆகியோரை ஏன் இன்னமும் முற்படுத்தவில்லை? என்று மன்று பொலிஸாரிடம் கேள்வி எழுப்பியது.

'சட்ட ஏற்பாடுகளுக்கு புறம்பாக போலி உறுதி மூலம் தனது பெயருக்கு காணியை உரிமை மாற்றம் செய்த நபருடன் மட்டும் இந்த விவகாரம் முடிந்துவிடவில்லை. இதில் ஒரு குழுவே சம்பந்தப்பட்டிருக்கின்றது என்பது தெரிகின்றது.

காணி மோசடிகள் நிகழ்ந்து வருவதற்கு சில நொத்தாரிசுகளின் செயற்பாடுகளும் காரணமாகவுள்ளன. இந்தச் சூழ்நிலையாலேயே யாழ்ப்பாணத்தில் காணிகளின் விலை எகிறிக் கொண்டிருக்கின்றது என்பதை மறுக்கமுடியாது. எனவே இந்த வழக்கின் போலி உறுதி நிறைவேற்றுவதில் ஈடுபட்ட அனைவரையும் உடனடியாக மன்றில் முற்படுத்தப்பட வேண்டும்' என்று மேலதிக கட்டளையிட்டார்.

சந்தேகநபர் சார்பில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்கு பொலிஸ் தரப்பில் பதில் அளிக்கப்பட்ட போது சட்ட மா அதிபரின் ஆலோசனையை நாடவிருப்பதாகக் கூறப்பட்டது.

'இந்தக் கட்டத்தில் அது தேவையில்லை. முதலில் சம்பந்தப்பட்ட அனைவரையும் நீதிமன்றில் முற்படுத்தி புலன் விசாரணையை நிறைவு செய்யுங்கள். அதன் பின்னர் சட்ட மா அதிபரின் ஆலோசனையைப் பெற அவரின் திணைக்களத்துக்கு புலன் விசாரணைப் பதிவேட்டை அனுப்புங்கள்' என்று மேலதிக நீதிவான் பொலிஸாருக்கு அறிவுறுத்தினார்.

சந்தேகநபரை எதிர்வரும் 28ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு' கட்டளையிட்ட நீதிவான், அன்றைய தினம் மன்றில் முற்பட வேண்டும் என்று யாழ்ப்பாண மூத்த பொலிஸ் அத்தியட்சகருக்கு அறிவித்தல் அனுப்பவும் உத்தரவிட்டார். (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பான வாடிக்கையாளருக்கு மகிழ்ச்சியான செய்தி

# கொழும்பு விலையில் யாழ். நகரில்

உங்களுக்குத் தேவையான அனைத்து வகையான பொருட்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

சில வருட காலமாக இயங்கி வரும் எமது ஸ்தாபனத்தில் விசேட விலைக் கழிவில் பெற்றுக்கொள்ளலாம்.

- பான்ஸிப் பொருட்கள்
- சில்வர் பொருட்கள்
- பை (Bag) வகைகள்
- கிளாஸ் வகைகள்
- மாபிள் வகைகள்
- பிளாஸ்ரிக் பொருட்கள்
- பாதணி வகைகள்
- முகக் கவசங்கள் (Mask)
- அன்பளிப்புப் பொருட்கள்
- மணிக்கூடுகள்
- விளையாட்டுப் பொருட்கள்
- குடை, மழைக்கவசங்கள்
- தையல் உபகரணங்கள்
- பாடசாலைப் பொருட்கள்
- கவரிங் பொருட்கள்
- அழகுசாதனப் பொருட்கள்

மொத்தக் கொள்வனவிற்கு 10% கழிவு

## சரவணபவன் பான்ஸி ஹவுஸ்

26/1, ஜும்மா பள்ளிவாசல் லேன்
(செம்மா தெரு ஒழுங்கை) யாழ்ப்பாணம்.

உரிமையாளர்:- தே.கலைத்தாசன் (கரன்)
021 315 5900, 077 468 3354

(CS 21206) (3/6)


## பதின்நான்காம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்
05 . 03 . 1932



மறைவு
24 . 10 . 2008

மீசாலை
### அமரர் சோமசுந்தரம் கணேசலிங்கம்
B.A, Dip. in Edu., M.A
(இளைப்பாறிய கொத்தணி அதிபர் )

**திதி: அபரபக்க ஏகாதசி**

ஆண்டுகள் பதின்நான்காகிப் போனாலும்
போகாதே நின் நிழலாடும் நினைவுகள்
பேசியமொழிகள் அடி மனதின் அந்தகாரமாய்
ஏகாந்த தனிமையில் சுரம் வடிக்குதே
எம் விழிநீரும் நிதம் சொரியுதே
உம் கனிவு கொண்ட நிஜங்கள்
இங்கு நிஜமற்றுப் போகவில்லை
நிஜமாகி எமையென்றும் வழிப்படுத்தும்
நாட்கள் நடந்தபடி கடந்துமிங்கு – உம்நினைவுகளை
நெஞ்சத்தில் சுமந்தபடி நாமிங்கு வாழ்ந்திடுவோம்.

**குடும்பத்தினர்**

35/1A, குமாரசாமி வீதி, கந்தர்மடம்.
"சிவகிரி", மீசாலை வடக்கு, மீசாலை.
72/27, பனிக்கர் ஒழுங்கை, திருநெல்வேலி.

# தொழில் முயற்சியாளர் விற்பனைக் கண்காட்சி
## கிளிநொச்சியில் ஆரம்பம்

கிளிநொச்சி, ஒக். 21

சிறுதொழில் முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருள்களுக்கான விற்பனைக் கண்காட்சி கிளிநொச்சி பசுமை பூங்கா வளாகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் ஏற்பாட்டில் 'கிளிநொச்சியில் உள்ள முயற்சியாளர் 2022' எனும் தொனிப்பொருளில் இந்தக் கண்காட்சி இடம்பெறுகிறது.

கிளிநொச்சி மாவட்ட காணி மேலதிக மாவட்டச் செயலர் திருலிங்கநாதன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்டச் செயலர் றூபவதி கேதீஸ்வரன், கிளிநொச்சி மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் க.சிறிமோகன் ஆகியோர் கலந்து கொண்டு கண்காட்சியை ஆரம்பித்து வைத்தனர்.

(ச-113)


## வாடகைக்கு

யாழ்ப்பாணத்தில் மாடி வீடு வாடகைக்கு உண்டு.
ஒவ்வொரு மாடியும் 4 அறைகளும், 2 குளியல் அறைகளும், சமையல் அறையும்,
நீண்ட L வடிவ பொது அறையும் கொண்டது.
புங்கங்குளம் ரயில் நிலயம் அருகாமையில் அமைந்துள்ளது. வாடகை பேசித் தீர்மானிக்கப்படும். கம்பனிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு மின்னஞ்சல்:
santhikesavan@gmail.com
074 351 2751

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் ஒட்டுமடத்தில் 30 பரப்புக் காணி விற்பனைக்கு**

✓ஒட்டுமடம் சந்தியிலிருந்து அராலி செல்லும் பிரதான காபெட் வீதி முகப்புடன்(காரைநகர் செல்லும் பிரதான காபெட் வீதி)
✓யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்டது.
✓2 பரப்பாகவும், 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
✓யாழ். பஸ்நிலையத்திலிருந்து 1 1/2 KM தூரம்
✓பார்வையிடும் நேரம்:
காலை 06.00 - மாலை 6.00

தொடர்பு: 077 911 6983
076 755 8606

அமெரிக்க லொத்தர் இலவச வீசா
ஏமாற்றுங்களை தவிர்க்க
உடனே பதியுங்கள்
Passport அவசியமில்லை
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்
இந்த வருடம் A/L எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம்
வெளிநாட்டு உதவி இல்லாதவர்களுக்கும் வெளிநாடு செல்ல காசு இல்லாதவர்களுக்குமான ஒரே ஒரு அரிய சந்தர்ப்பம்
V2 Travels
இதுவரை எமக்கூடாக விண்ணப்பித்த நூற்றுக்கணக்கானோர் அமெரிக்காவில் குடும்பத்துடன் வசிக்கின்றார்கள்
0768226244

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 05 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- 18 அடிப் பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்
- திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.
- பார்வையிடும் நேரம்
காலை 6 மணிமுதல் மாலை 6 மணி வரை

**தரகர் தேவையில்லை.**

தொடர்பு:- ஜெயம்
077 8147 389
077 9865 457




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.10.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.